Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
• INDEPENDENTLY OWNED AND OPERATED
HOMELIFE
HIGHER STANDARDS
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

17 வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

நதி 17 | பாலம் 16 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 15, 2007



நோய் தீர்க்கும் பழங்கள் 11



நேர்காணல் நடிகர் நாசார் 19

INDEPENDENT ART FILM SOCIETY
6ஆவது தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா ஒக்ரோபர் 06, 2007
படைப்புக்கள் கிடைக்க வேண்டிய இறுதி நாள் புரட்டாதி 15, 2007
416-857-6406 / 416-450-6833

# தமிழர்களுக்கு கிடைத்த அரசியல் வெற்றி!

### சர்வதேசத்தின் முன் குற்றவாளியாக இலங்கை அரசு

இலங்கை அரசு சிறுபான்மை இன மக்களுடன் அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளாமையாலும், சிறுபான்மை மக்களின் உரிமைகளை மதிக்காமையாலும், மற்றும் தொடர்ந்து இலங்கையில் நடைபெறும் மனித உரிமைமீறல்கள் தொடர்பாகவும் சர்வதேசம் தமது கண்டனங்களை இலங்கை அரசுக்கு எதிராகத் தெரிவிக்கத் தொடங்கி விட்டது என்பது தெரிந்ததே.

இதனுடைய ஒரு முக்கிய கட்டமாக "உலகிலேயே மனிதாபிமானப் பணியாளர்கள் பணியாற்றுவதற்கு மிகவும் ஆபத்தான - மோசமான இடம் சிறிலங்கா" என்று இலங்கைக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளரும் நிவாரண ஒருங்கிணைப்பாளருமான ஜோன் ஹோல்ம்ஸ் சாடியுள்ளார். இது இலங்கை அரசின் நடத்தைக்கு கிடைத்த ஒரு வெகுமதியான பரிசு என்று அரசியல் அவதானிகள் கருத்துக் கூறியுள்ளனர்.

"சிறிலங்கா அரசாங்கமானது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள், துஸ்ப்பிரயோகங்கள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும். அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவை அமைப்பது குறித்து பரிசீலிக்க வேண்டும். அனைத்துலகம் தொடர்பிலான சிறிலங்கா மீதான நல்ல கருதுகோளுக்கு அதுவே வகை செய்யும். உலகிலேயே மனிதாபிமானப் பணியாளர்கள் பணியாற்றுவதற்கு மிகவும் ஆபத்தான மோசமான இடமாக சிறிலங்கா உள்ளது. மனிதாபிமான பணியாளர்களின் பாதுகாப்பு கவலைக்குரியதாக உள்ளது. இதர குழுவினரை ஒப்பிடுகையில் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களுக்கு உயரிய விழுமியங்கள் உண்டு. ஆகையால் மனித உரிமைகள் தொடர்பிலான கவலைகளுக்கு அந்த அரசாங்கங்கள் முகம் கொடுக்க வேண்டும். குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்றும் ஜோன் ஹோல்ம்ஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

இதே நேரம் இலங்கையின் எதிர்க்கட்சி தலைவரும் அடுத்து ஆட்சியை கைப்பற்றுவார் என்று நம்பப்படுகின்ற ரனில் விக்கிரமசிங்க இலங்கையின் மகிந்த அரசுக்கு எதிரான பிரச்சாரத்தை உலக அளவில் செய்து வருகின்றார். இதனுடைய ஒரு உச்சக் கட்டமாக ஒரு அதிர்ச்சியான முடிவை அவருடைய கட்சி அறிவித்துள்ளது. மகிந்த அரசு வாங்குகின்ற எந்த ஒரு வெளிநாட்டுக் கடனையும் தனது அரசு செலுத்தாது என்று ரனில் விக்கிரமசிங்காவின் ஐக்கிய தேசிய கட்சி பகிரங்கமாக உலகத்துக்கு அறிவித்துள்ளது. இது ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். மகிந்தாவின் அரசுக்கு கிடைத்த மிகப் பெரிய தோல்விகளில் இதுவும் ஒன்று.

அது மட்டுமல்லாது சிங்கள புத்திஜீவிகளும், சிங்கள மனித உரிமையாளர்களும் தொடர்ந்தும் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்துக் கொண்டே வருகின்றனர். சிங்களவர்கள் எல்லாருமே தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் என்ற ஒரு பொய்யான கருத்து நமது தமிழர் மத்தியில் இருந்து வருகின்றது என்பது உண்மையே. இந்நிலையில் "தமிழ் மக்களின் போராட்டம் என்பது அவர்களின் துயரங்களுக்கு வழிதேடும் வகையிலான நீதியான ஒரு போராட்டம். எனவே தமிழ் மக்களின் போராட்டம் பயங்கரவாதம் என்ற கருத்து இங்கு பொருத்தமற்றது" என்று பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சுமணசிறி லியனகே கூறியுள்ளார்.

புலிகள் ஏன் ஒரு இராணுவமுகாமை தாக்கவில்லை, ஒரு யுத்தத்தை தொடங்கவில்லை என்று தமிழர் சிலர் விமர்சனம் செய்து கொண்டிருக்கும் அதே வேளை கத்தி இன்றி, துப்பாக்கி இன்றி இலங்கை அரசிற்கு எதிரான ஒரு சர்வதேச புயலை புலிகள் உருவாக்கியுள்ளனர். இது புலிகளின் அடுத்த கட்ட நடவடிக்கைக்கு கிடைத்திருக்கும் மிகப் பெரிய அரசியல் பலமாகும். அதே சமயம் சர்வதேச சட்டங்களுக்கு கட்டுப்பட்டு புலிகள் தொடர்ந்தும் நடப்பது அவர்களுக்கு மேலும் பல முக்கியத்துவமான அரசியல் வெற்றிகளை பெற்றுத்தரும் என்று அரசியல் அவதானி ஒருவர் கருத்து தெரிவித்தார்.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Real Education
உண்மையான கல்வி
அறிவுத்திறன் + பண்பு
Classes for 9 to 17 years old
Focus, Memory, Reading Skill, Listening Skill, Presentation Skill, Goal Setting, Self-Confidence, Self-Discipline - Patience - Obedience, Positive thinking, Team Work, Winning Attitude, Leadership...
Tel.: 416-725-5112
KG Master www.kgmaster.com
Education = Intelligence + Character

• 1ST, 2ND, 3RD MORTGAGES
• BAD CREDIT
• UNEMPLOYED
• POWER OF SALE
• SELF-EMPLOYED
• CAR & TRUCK LOANS
(instant approve)
Chandran Ponnampalam
Senior Mortgage Consultant
Trillium Mortgage
Direct: 416.666.5540 Office: 416.279.1159

துரித பணமாற்றுச் சேவை
• 49 வருடங்கள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 16 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221

அடமானக் கடன் செய்து கொடுப்பதே!
என் பணி
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM
Veedu Mortgages Inc.

Buy & Sell Residential and Commercial
Raj
A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3

வாழ்வு-வியாபாரம்-முதலீடு
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc., Brokerage *
Shiva Sharmah
Sales Representative
416-666-5515
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

உலகம் முழுவதும் பங்குசந்தை விலைகள் சரிந்தன. இந்தியா, சீனா போன்ற நாடுகளிலும் இந்த வீழ்ச்சி இருந்தது. கனடாவும் விதிவிலக்கல்ல. கனடாவில் தொடர்ந்து மூன்று வாரங்களாக பங்கு சந்தை விலைகள் வீழ்ச்சியடைந்து வருகின்றன. ரொறொன்ரோ பங்கு சந்தையில் யூலை 27 இல் முடிந்த வாரத்தில் நிகழ்ந்த விலை வீழ்ச்சி 5.7 சதவீதம். அதற்கு மறுவார வீழ்ச்சி 1.3 சதவீதம். இப்போது முடிந்த ஆகஸ்ட் பத்து அல்லது மூன்றாவது வாரத்தில் மேலும் அடைந்த வீழ்ச்சி 0.7 சதவீதம். ஆக மூன்று வாரத்தில் ரொறொன்ரோ பங்கு சந்தையில் ஏற்பட்ட விலை வீழ்ச்சி 7.7 சதவீதம். இது தொடருமா? தொடரும் போலத்தான் தோன்றுகின்றது.

**பெரி. முத்துராமன்**

காரணம் என்ன?

அமெரிக்காவில் பொறுப்பில்லாமல் கொடுக்கப்பட்ட வீட்டுக்கடன்களின் விளைவை இன்று உலகம் முழுவதும் உள்ள பங்கு சந்தையின் விலை வீழ்ச்சியில் பார்க்கின்றோம். எப்படி?

பெருமளவில் வீட்டுக்கடன்களை வங்கிகள் கொடுக்கும் போது, அந்தக் கடன்களில் ஒரு பகுதியை முதலீடு செய்ய விரும்பும் மற்ற வங்கிகளுக்கும், மற்ற நிதி நிறுவனங்களுக்கும் அமெரிக்காவில் முதன்மையான கடன் கொடுத்த வங்கி பிரித்துக் கொடுப்பது வழக்கம். அவ்வாறு பிரித்துக் கொடுக்கப்பட்ட அமெரிக்க வீட்டுக் கடன்களில் ஐரோப்பிய, கனடிய வங்கிகளும், மற்ற நாட்டு வங்கிகளும் முதலீடுகள் செய்திருக்கின்றன. அதனால் இப்போதைய அமெரிக்க வீட்டுக்கடன் பிரச்சினை என்பது ஏறத்தாழ உலக பங்குச் சந்தைப் பிரச்சினையாகி விட்டது. பயம் என்று வரும் போது அறிவு வேலை செய்வதை விட உணர்ச்சிகள் தான் அதிகம். வேலை செய்யும் ஆட்டுமந்தைப் போக்கு அதிகம் தென்படும். உலகப்பங்குச் சந்தையின் நிலையும் ஏறத்தாழ இதுதான். முதலீட்டாளர்களுக்கு வாரந்தோறும் பொதுவில் நட்டத்தின் மேல் நட்டம். பணத்தை இழக்கும் போது பயம் வருவது இயல்பு தானே.

ரொறொண்ரோ பங்குச் சந்தையில் எல்லா வங்கிகளின் பங்குகளிலும் ஆகஸ்ட் பத்தில் முடிந்த வாரத்தில் விலைச் சரிவு காணப்பட்டது. மூன்றில் இரண்டு பங்குகளின் விலையில் வீழ்ச்சி காணப்பட்டது. மொத்த எண்ணிக்கையில் பார்த்தால் 1097 பங்குகளின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது.

இந்த விலை வீழ்ச்சி பொதுவில் நிதி நெருக்கடி வருமோ என்ற பயத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் முதலீட்டாளர்களுக்கும், நிறுவனங்களுக்கும் பணப்பற்றாக்குறையும் வருமோ என்ற பீதியை உலகம் முழுவதும் உண்டாக்கியிருக்கின்றது.

இதன் காரணமாக வங்கித் துறையில் நிதி நெருக்கடி ஏற்பட்டால் இருக்க உலகம் முழுவதும் உள்ள மத்திய வங்கிகள், வங்கிகளுக்கு குறைந்த வட்டியிலும், மற்ற முறைகளிலும் பெரிய அளவில் நிதி உதவியை அளித்துள்ளன. கனடாவில் மட்டும் ஆகஸ்ட் இரண்டு மற்றும் ஆகஸ்ட் ஏழு தினங்களில் Bank of Canada 663 மில்லியன் டொலர்களை வங்கிளுக்கு



வழங்கியுள்ளது. இவ்வாறு மத்திய வங்கிகள் செய்யவில்லை என்றால் கடன் தட்டுப்பாடு வரலாம். கடன் கொடுக்க வங்கிகளிடம் காசில்லாமல் போகலாம்.

இப்போது அமெரிக்காவில் வீட்டுக்கடன் பெறுவது என்பது முன்பைப் போல் சுலபம் இல்லை. வங்கிகள் வாடிக்கையாளர் தரும் வருமான விவரங்களைப் பெரிய அளவில் சரிபார்க்க ஆரம்பித்துள்ளன. கிரிடிட் ஸ்கோரைப் பொறுத்து, முன்பு கடன் கிடைத்த பலருக்கு இப்போது கடன் கிடைக்கவில்லை. கிடைத்தாலும் வட்டி கூடுதலாக உள்ளது. வீட்டுக்கடனை ஏற்கனவே வாங்கியவர்கள் பலர் கட்ட முடிய முடியாமல் தவிப்பது வாரத்துக்கு வாரம் கூடுதலாகி வருகின்றதாம்.

அமெரிக்க அனுபவங்களின் அடிப்படையில் கனடிய வங்கிகளும் கனடாவில் வீட்டுக்கடன்களைப் புதிய பார்வையுடன் பார்க்கத் தொடங்கியுள்ளன. நீங்கள் எத்தகைய முதலீட்டாளராக இருந்தாலும் பணத்தைத் தற்சமயம் திரவ நிலையில் வைத்திருத்தல் நலம். அல்லது வங்கிகளின் பாதுகாப்பான முதலீடுகளில் பணத்தைப் போட்டு வைத்திருத்தல் நலம்.

கனடாவில் வீட்டு விற்பனையும் சற்றே மந்தப்பட்டிருப்பதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. வீட்டில் முதலீடு செய்ய விரும்புவோரும் கூட நிலைமையை கூர்ந்து கவனித்துச் செயலில் இறங்குவது நல்லது. வீட்டு விலைகள் கனடாவில், அமெரிக்காவைப் போன்று குறையுமா என்று தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

இக் கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ள ஸ்கோஷியா வங்கி தொலைபேசி எண் 416.439.3040 Ext 2008.



# மேற்கு மாகாணங்களை நோக்கிய கனேடிய மக்களின் இடப்பெயர்வு

கனடாவின் மேற்கத்தைய மாகாணங்களான அல்பேட்டாவும் பிரிட்டிஷ் கொலம்பியாவும் பொருளாதாரத்தில் அபரிதமாக வளர்ந்து வருகின்றன. இதனால் கனடாவின் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்கள் மேற்கு மாகாணங்களை நோக்கி இடம்பெயர்ந்து வருகிறார்கள். கடந்த வருடம் மட்டும் 380,000 பேர் இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் மிகவும் படித்த (Well - educated) இளவயதினர் ஆவர். இவ்வாறு இளவயதினர் இடம் பெயர்வதால் அவர்களின் சம்பள உயர்வு இரண்டு மடங்காகிறது. அதாவது ஒரு படித்த இளைஞனின் 2006 ஆம் ஆண்டு சம்பள உயர்வு அவர் கனடாவின் கிழக்கு மாகாணங்களில் இருந்திருந்தால் 4.8 வீதமாகவும் மேற்கு மாகாணங்களுக்கு இடம்பெயர்ந்து இருந்தால் 9.4 வீதமாகவும் இருந்தது.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களால் மட்டுமே கனடாவின் கடந்த வருட மொத்த பொருளாதார உற்பத்தி (Gross Domestic Product) இரண்டு பில்லியன் (இருநூறு கோடி) டொலரால் உயர்ந்தது. இவர்கள் தங்களது படிப்பிற்கு ஏற்ற வேலையையும் நல்ல சம்பளமும் பெற்று திருப்தியாக இருக்கிறார்கள்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பான்மையோர் ஒன்ராரியோ மற்றும் கியூபெக் மாகாணத்தை சேர்ந்தவர்கள்.

கடந்த வருடம் ஒன்ராரியோ மாகாணத்தின் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட உற்பத்திக் குறைவும் ஒன்ராரியோ மாகாணத்தின் வளர்ந்து வரும் வேலையற்றவர்கள் தொகையும் அம்மாகாணத்தில் இருந்து மேற்கு மாகாணங்களுக்கு இடம்பெயர்பவர்களின் எண்ணிக்கையை



கூட்டியது.

கனடாவின் சராசரி மொத்த பொருளாதார உற்பத்தி இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களால் 200 கோடி டொலரால் உயர்ந்தாலும் அது ஒவ்வொரு மாகாணங்களுக்கும் வேறுபடும். அல்பேட்டாவும் பிரிட்டிஷ் கொலம்பியாவும் மட்டுமே இவ்விடப் பெயர்வால் அதீத பொருளாதார உற்பத்தியை கொடுத்த மாகாணங்களாகும்.

தொடர்ச்சி 03ஆம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

**HOME INSPECTION**
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
**ந. தயாபரன்**
Certified Inspection Specialist
**Expert Building Inspections LTD.**
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - **1.866.373.3315 416.727.8336**

# நீண்டநாள் வாழ - நினைத்ததை அடைய

## (பாகம் - 2)

சென்ற இதழில் ஒருவரின் நீண்ட ஆயுளுக்கு அவரின சுவாசத்தின் எண்ணிக்கையின் வேகத்தின் குறைவினையும், சுவாசப் பயிற்சியின் முக்கியத்துவத்தினையும் அத்துடன் மற்ற உயிர்வாழ் இனங்களின் சுவாசத்தின் அளவினையும் அவற்றின் வாழும் காலத்தையும் பார்த்தோம். இந்த இதழில் நாம் சுவாசிக்கும் போது கிடைக்கும் பிராணவாயுவின் அளவிற்கும் அவற்றின் அதாவது சுவாச எண்ணிக்கையின் குறைவிற்கும் நீண்ட ஆயுளுக்குமுள்ள தொடர்பினையும் அதற்கான பயிற்சி முறைகளையும் பற்றி பார்ப்போம்.

### மெதுவாக சுவாசிப்பதற்கு சில வழிமுறைகள்



மெதுவாக சுவாசிப்பதால் ஆயுள் அதிகரிக்கும் என்பது பற்றி முன் கூறப்பட்டுள்ளது. சுகப் பிராணாயாம பயிற்சியாலும், நாடிசுத்தி முறையாலும் சுவாசமானது ஒன்றுக்கொன்று வேறுபாடின்றி மெதுவாக சுவாசிப்பதில் ஈடுபடுகிறது. இது மனதிலுள்ள சஞ்சலங்களை போக்கி மனதை கட்டுப்படுத்துவதுடன் அதனை ஒருமுகப்படுத்தி தியான நிலைக்கு கொண்டு செல்கின்றது. இது உடலிலுள்ள நரம்புகளையும் தசைகளையும் வலுப்பெறச் செய்து உடலின் சக்தியை சமநிலையில் வைக்கிறது. உணர்வுடன் சுவாசிப்பது மிக அவசியம். இப்படி சுவாசிப்பது மூளைப் பகுதியிலுள்ள சுவாசக்கட்டுப்பாட்டு மையத்தை சிறந்த முறையில் இயக்குகிறது. உணர்வற்ற நிலையிலுள்ள சுவாசம் ஆழமான சுவாசமாக இருக்க முடியாது. மெதுவான ஆழமான உணர்வுடன் கூடிய சுவாசம் ஆயுளை நீடிக்கச் செய்கிறது.

மனதில் பாரமும் அமைதியின்மையும் ஏற்படும் காலங்களில் உடலுக்கு பிராணவாயுவின் தேவை அதிகமாயிருக்கும். ஆனால் அந்த நேரத்தில் அது தேவைக்கு பத்தில் ஒரு பங்காகக் குறைந்து விடுகிறது. இதனாலேயே மன அழுத்தம் (Tension) மன இறுக்கம் (Stress) என்பன மட்டுமன்றி இரத்த அழுத்தம் (Blood Pressure) என்பனவும் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்த நேரங்களில் எல்லாம் மெதுவாகவும் சற்று ஆழமாகவும் உணர்வுடன் சுவாசத்தை உள்ளிழுத்து வெளிவிடும் போது மேற்கூறப்பட்ட நோய்களிலிருந்து விடுபடுவதுடன் உடலில் புத்துணர்ச்சியும் தென்பும் ஏற்படுகின்றது.

முக்கியமாக நுரையீரலின் (Lungs) முழு அளவுக்கு சுவாசிப்பதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். இது சாதாரண மனிதர்களின் சுவாசப்பைகளின் கொள்வனவை விட அதிகமாகும். அதனால் நுரையீரலில் மூன்று பாகங்களாகப் பிரிந்து பின் எல்லாப்பக்கமும் 18 பாகங்களாகப்பிரிந்து ஒவ்வொரு பாகமும் விரிந்தும், சுருங்கியும் புத்துயிர் பெறுவதுடன் இருதயத்திலிருந்து பல்வேறு பகுதிகளுக்கும் செலுத்தப்படும் இரத்தத்தைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்துகின்றது. இதனால் ஆஸ்துமா, சளித்தொல்லை, இரத்தக்கொழுப்பு என்பன வருவதற்கு வாய்ப்பே இல்லை. இதற்கு நாடிசுத்தி, மூச்சுப்பயிற்சி உறுதுணை செய்கிறது. மெதுவாகவும் ஆழமாகவும் சுவாசிப்பவர்களின் சக்தி அதிகப்படுவதுடன் உடலின் இயற்கையான நோய் எதிர்ப்பு சக்திகளை வளர்ச்சியடையச் செய்கிறது. சுவாச உறுப்புகளின் வெப்பத்தை அதிகப்படுத்தி சளி சம்பந்தப்பட்ட நோய்களை அகற்றுகிறது.

### சுவாசத்தின் கால நியதி

சுவாசத்தை முறையாகவும் மெதுவாகவும் ஆழமாகவும் சுவாசிக்கப் பழகிக் கொண்டால் உடல் நிதானமடைந்து உட்பகுதிக்கு சரியான அளவு வெப்பத்தைக் கொடுக்கிறது. இதனால் ஆயுளும் நீடிக்கின்றது.

### சுவாசத்தின் வேகம் குறைய சில வழிமுறைகள்

1. உங்கள் உடலை ஓய்வு எடுக்கச் செய்து சுவாசத்தில் உணர்வு உடையவர்களாக இருத்தல்.

2. நீங்கள் தேவையற்ற சிந்தனை-களையும், வீண் மனஉளைச்சலையும் தவிர்த்தால் உங்கள் சுவாச



எண்ணிக்கை நிச்சயமாக குறைவதுடன் உங்கள் ஆயுளும் நீடிக்கும்.

3. ஆக்கபூர்வமான சிந்தனைகள் அதாவது அன்பு, நட்பு, இனிமை, ஆனந்தம் என்பன சுவாச வேகத்தைக் குறையச் செய்யும். ஆக்கபூர்வமற்ற சிந்தனைகள் அதாவது கோபம், பொ-றாமை, பகை போன்றவை சுவாச எண்ணிக்கையை வேகப்படுத்தி ஆயுளையும் குறைக்கின்றது. தடித்த சரீரமும், தொந்தி வயிறும் உயிருக்கு ஆபத்தானவைகள் இடுப்புப் பகுதி பருத்தால் ஆயுள் காலம் குறையும்.

எனவே தான் யோகாசன பயிற்சி இந்தப் பிரச்சினைகளுக்கு நிவாரணமாக அமைந்துள்ளது. யோகப் பயிற்சியினை தினமும் குறைந்து 20 நிமிடமாவது செய்து வருபவர்களுக்கு எந்த நோயுமில்லை, முதுமையும் நெருங்குவதில்லை, ஆயுளும் மிக நீளம்.



ஆரோக்கிய வாழ்வு

N. செல்வசோதி

416.289.2033 after 7:00pm

---

# மேற்கு மாகாணங்களை...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

அல்பேட்டா மாகாணத்தின் மொத்த பொருளதார உற்பத்தி மட்டுமே 460 கோடி டொலரால் உயர்ந்தது. ஒன்ராரியோவும், கியூபெக்கும் இடப்பெயர்வால் மொத்த பொருளாதார உற்பத்தியில் வீழ்ச்சியையே பெற்றன. ஒன்ராரியோ மாகாணத்தின் மொத்த பொருளாதார உற்பத்தியின் வீழ்ச்சி 140 கோடி டொலராகும்.

பொருளியலாளர்களும் (Economists) மற்றும் கனேடிய வங்கியும் (Bank of Canada) இவ்வாறு மக்கள் இடம்பெயர்வது நாட்டின் பொருளாதாரத்திற்கும் இடம்பெயரும் மக்களுக்கும் மிகவும் நல்லது என்கிறார்கள். கனடாவின் பொருளாதார வளர்ச்சி குறைந்த (Slow-economy) கீழக்கு மாகாணங்களிலிருந்து பொருளாதாரத்தில் அபரித வளர்ச்சி (Economic Boom) அடையும் மேற்கு மாகாணங்களிற்கு மக்கள் போவதால் நாட்டின் சராசரி பொருளாதார உற்பத்தி வளர்கிறது என்கிறார்கள். இதையே இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களால் மட்டும் கடந்த வருடம் 200 கோடி டொலரால் உயர்ந்த கனடாவின் மொத்த பொருளாதார உற்பத்தி எடுத்துக்காட்டுகிறது.

கிழக்கு மாகாணங்களிலிருந்து அல்பேட்டாவை நோக்கி இடம் பெயர்பவர்களின் தொகை கடந்து பத்து வருடங்களாக தொடர்ந்து கூடிக்கொண்டு செல்கிறது. கனடாவின் பொருளாதார வளர்ச்சியால் கனடாவின் வேலையற்றோர் தொகை 6.0 வீதமாக இருக்கின்றது. இதுவே கனடாவின் சரித்திரத்தில் கடந்த 33 வருடங்களில் மிகவும் குறைந்த வேலையற்றவர்களின் வீதமாகும். அண்மைக் காலங்களில் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பவியலாளர்கள் தேவைப்படும் வேலைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

உற்பத்தித்தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கையும் அண்மைக்காலத்தில் சிறிதளவு அதிகரித்திருந்தாலும் உற்பத்தித் தொழிற்சாலைகளில் 2006 ஆம் ஆண்டில் வேலை செய்தவர்களில் இன்னமும் 72,000 பேர் கிழக்கு மாகாணங்களில் வேலையில்லாமல் இருக்கிறார்கள்.

கடந்த வருடம் அதிகூடிய வேலை அதிகரிப்பை அல்பேட்டா மாகாணமே காட்டியுள்ளது. கனடாவின் வேலையற்றோர் தொகை 6.0 வீதமாக இருந்தாலும் அல்பேட்டா மாகாணத்தின் வேலையற்றோர் தொகை 3.3 வீதம் மட்டுமே.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# Words of Peace



**இச்சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்ளுங்கள்**
(பிரயோசனப் படுத்துங்கள்)

## *Take This Opportunity*

மக்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் தம்மைச் சுற்றியுள்ள உலகில் திருப்தியைத் தேடுவதுடன் மற்ற மக்களில் நிறைவையும் தேடுகிறர்கள்.

"இந்தக் காரை வாங்கினால் நீங்கள் சந்தோசமாக இருப்பீர்கள்" என விளம்பரங்கள் கூறுகின்றன. "இந்த சூழலில் நீங்கள் வாழ்ந்தால் அப்போது நீங்கள் திருப்தியடைவீர்கள். நல்ல வேலை ஒன்றைத் தேடுங்கள், பதவி உயர்வு பெறுங்கள். நல்ல திருமணத்தைச் செய்து குழந்தைகளைப் பெறுங்கள், நீங்கள் நிறைவு பெறுவீர்கள்" என்று திரைப்படங்கள் விதந்துரைக்கின்றன.

மேலதிக தகவல்களுக்கு - 416 431 5000
1 877 707 3223 Toll Free
For more information: ww.emmullayam.org
தமிழ் - www.wordsofpeace.ca
www.contactinfo.net

'விரக்தியாக இருக்கிறீர்களா? ஓர் அதிஷ்ட இலாபச் சீட்டை வாங்குங்கள். கவலையா? ஒரு முற்றிலும் மாறுபட்ட சூழலைக் கொண்ட ஒரு தீவிற்குப் போய் ஓய்வெடுங்கள்."

திருப்தி மிகவும் எளிமையானது எனவும் மற்ற எல்லாவற்றையும் விட மிகவும் அருகாமையில் உள்ளது எனவும் அமைதிக்காக உரத்த குரல் கொடுக்கும் மஹராஜி என்ற கௌரவப்பெயர் கொண்ட பிறேம் இராவத் அவர்கள் கூறுகின்றார். நாம் பிழையான திசையில் அதைத் தேடிக் கொண்டிருக்கிறோம். நாம் எதைத் தேடிக்கொண்டிருக்கிறோமோ அது எமக்குள்ளேயே உள்ளது என மஹராஜி கூறுகின்றார்.

நாம், எம்மைப் பிழையான (தாழ்வாக) (குறைத்து) எடை போடுகின்றோம் என மஹராஜி கூறுகீன்றார். நாம் எதைச் சாதிக்கவேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கு முன்னர் நாம், எம்மிடம் என்ன இல்லை என்பதைப் பார்க்கிறோம். எம்மிடம் என்ன இல்லை? நாம் எதைச் சாதிக்கவில்லை என்பதைத்தான் மக்கள் எங்களிடம் கூறுகின்றார்கள். கடைகளில் நாம் பார்க்கும் யாவும் (எல்லாம்) எங்களிடம் என்ன இல்லை என்பதைத்தான் கூறுகின்றன.

எல்லா விடயங்களையும் பிழையாகவே எடைபோடும் ஓர் உலகில் எங்களால் எப்படி அமைதியைப் பற்றிக் கதைக்க முடியும்? எங்களிடம் உள்ள விடயங்களில் அமைதியும் ஒன்று. ஒவ்வொரு மனிதனுடனும் கூடப் பிறந்த (இயல்பாகவே எம்முள் உள்ள) விடயங்களில் அமைதியும் ஒன்று. இது மிகவும் இருளான இரவில் பற்ற வைக்கப்பட்ட விளக்கொன்று, அதனைக் கண்டுகொள்ளப்படுவதற்கு காத்திருப்பது போன்றது.

மஹராஜி அவர்கள் தான் பிறந்த ஊரான இந்தியாவில் தனது இளம்பராயத்தில் இருந்தே எமக்குள்ளே உள்ள அமைதியின் அனுபவம் பற்றியும், நிறைவடைவதற்காக மனிதர்களுக்கு இருக்கும் ஆவலைத் திருப்திப்படுத்துவற்கான அதன் ஆற்றல் பற்றியும் உரையாற்ற ஆரம்பித்துவிட்டார். இப்பொழுது 4 தசாப்தங்களுக்குப் பின்பு அவர் உலகைச் சுற்றி வந்து, ஒவ்வொரு கண்டங்களிலும் உள்ள நகரங்களுக்குச் சென்று, தனது உற்சாகமூட்டுதலையும், வழிகாட்டுதலையும் வழங்கி வருகின்றார்.

உங்களிடம் பத்துக் கார்கள் இருப்பதினாலோ அல்லது விலையுயர்ந்த கடிகாரம் இருப்பதினாலோ, உங்கள் மகன் நீங்கள் சொல்பவற்றைக் கேட்பவனாகவும், பாடசாலையில் நல்ல மதிப்பெண்களைப் பெறுபவனாக இருப்பதால் மட்டும் அடையக்கூடிய நிறைவு அல்ல. நிறைவை உயிர் வாழும் ஒவ்வொரு மனிதனாலும் அடையமுடியும் என மஹராஜி கூறுகின்றார். உங்கள் மனைவி வீட்டில் இருந்து மிகவும் அற்புதமாக உணவு தயாரிப்பதனாலோ, உங்கள் கணவன் உங்களுக்குச் சமைத்துத் தருவதுடன் வீட்டைத் துப்புரவு செய்து தருவதினாலோ வரும் நிறைவு அல்ல. ஆனால் உங்களுக்குள்ளே சுவாசம் வருவதினாலும் - நீங்கள் உயிருடன் இருப்பதினாலும் உங்களால் அதை அடைய முடிகிறது.

உண்மையிலேயே நாம் எல்லோரும் வெற்றிகரமாக வாழத்தான் விரும்புகின்றோம். நாம் வாழும் சமூகத்தில் வெற்றி என்பது மிகவும் பெரிய விடயம். யாராவது ஒருவர் எவரையாவது பார்த்து அவர்கள் வெற்றியடையவில்லை என்று சொன்னால் அதன் கருத்து அவர்களிடம் எதுவோ ஒன்று இல்லை என்னபதேயாகும். நான் உங்களிடம் இல்லாத ஒன்றைப் பற்றிக் கூறவில்லை. உங்களிடம் உள்ள ஒன்றைப் பற்றிச் சொல்லத்தான் இங்கு வந்திருக்கிறேன். இந்த உயிர் வாழ்வில் உள்ள சாத்தியத்தை நீங்கள் இனங் கண்டுகொள்ள வேண்டும்.

எம்முள்ளே உள்ள உள் அமைதியை அனுபவிக்கும் வரை நாம் எதையுமே அனுபவிக்க ஆரம்பிக்கவில்லை என்றுதான் நான் கூறுவேன். நாம் அந்த அனுபவத்தை அமைதி என்று அழைக்கலாம். அல்லது நாம் அந்த அனுபவத்தை ஆனந்தம், சந்தோசம், களிப்பு, அல்லது நிறைவு என்றோ அழைக்கலாம். எப்படி அழைக்கின்றோம் என்பது ஒரு பொருட்டல்ல. இவையெல்லாம் ஒரே பொருளின் பெயர்கள் தான். எங்களுக்கு விருப்பமாயின் நாம் இதை வெற்றி என்று கூட அழைக்கலாம்.

நான் கூறுவதெல்லாம் முதலில் உள்ளே என்ன உள்ளது என்பதைத் தெளிவாக விளங்கிக் கொள்ளுங்கள். விரைவாக அதை எப்படிப் பெற்றுக் கொள்வது என்பது பற்றிச் சிந்திக்க வேண்டாம். அதைத்தான் எம் முழு வாழ்நாளிலும் செய்துள்ளோம். காட்சியறையில் இருக்கும் உடையையோ, சட்டையையோ நாம் விரும்பினால், உடனடியாக எமது கடன் அட்டைகளை இழுத்தெடுத்து "இந்தாருங்கள், எனக்கு அது வேண்டும்" என்று கூறுவோம்.

உள்ளே திரும்ப வேண்டி வரும்போது, உங்கள் உண்மையான நிலையை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு வரும்போது, எம்முள்ளே ஒப்பற்ற அறிவு உள்ளதென்னும் விளக்கத்தை பெறும்போது, எந்தக் கடன் அட்டையினாலும் உதவி செய்ய முடியாது. அதை கொள்வனவு செய்வதற்கான எந்தக் கடையும் அங்கே இல்லை. அங்கு சென்று வரிசையில் முதலாவதாக நிற்கவேண்டும் என்று சொல்லக்கூடிய எந்த இடமும் இல்லை. ஏன் அப்படி இருக்கிறதெனில் இது உங்களைப் பற்றியது. ஆகவே இது நம்பமுடியாத அளவு மிக அன்னியோன்னியமாக உள்ளது. இது உண்மையானதும், எமக்குள்ளே உள்ளதென்பதையும் நாம் விளங்கிக் கொண்டால் ஆறுதலாக இருக்கலாம். அதைக் கண்டு பிடிப்பதற்குத் தேவையான அடிகளை நாம் எடுத்து வைக்கலாம். அந்த அழகை, அந்த ஆனந்தத்தை, அந்த அற்புதமான அமைதியைக் கொண்டாடுவதற்கு நாம் தயாராகலாம்.

ஒவ்வொரு நாளும் உயிர் வாழ்வதற்கான சந்தர்ப்பம் அங்கே உள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தை எடுத்துக் கொள்ளுங்கள். சதாகாலமும் நாம் இங்கே இருக்கப் போவதில்லை. அந்த அவசியத்தை உணருங்கள், இன்று உயிர் வாழ்வென்பது எதைக்கருதுகின்றது என்பதில் முக்கியத்துவம் கொடுங்கள். எம்மால் செய்யக்கூடிய அதி குறைந்த - அதி கூடிய விடயம் அல்ல. அந்த அதிகுறைந்த விடயம் என்னவெனில் அது எதைக் கருதுகின்றதென்பதை இனங்கண்டு கொள்வதுதான்.

ஒவ்வொரு மனிதனும் நிறைவடையவேண்டும் என்பதையே நான் குறிப்பிடுகின்றேன். அதுதான் விடயம். நாம் அமைதியாக இருக்கவேண்டும். அதுதான் அந்த விடயம். தேவையான தெல்லாம் அவைதான்.


## ஹார்மணி ஹோல்

# வசந்த விழா

## Harmony Hall Vasantha Vilaa

**2 Gower Street - VictoriaPark & St. Clair**
Toronto, ON, M4B 1E2, Canada

அன்பு தமிழ் உறவுகளுக்கு,



ஹார்மணி ஹோல் (Harmony Hall) மண்டபத்தில் ஆவணி மாதம் 25ஆம் திகதி மாலை 5:00 மணி அளவில் **'ஹார்மணி ஹோல் வசந்த விழா'** என்னும் நிகழ்ச்சி வழங்கப்படவுள்ளது. நீங்கள் அனைவரும் வந்து உங்கள் பங்களிப்பை தருமாறு ஹார்மணி ஹோல் நிறுவத்தினர் அழைக்கின்றார்கள். உங்கள் அனுமதிச் சீட்டை இங்கு வந்து பெற்று கொள்ளளாம். கட்டணம் $10.00.

தொடர்புகளுக்கு: அழையுங்கள் ஜீவித்தா
தொலைபேசி இலக்கம் - **416-752-0101**





**வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.**

பரம்ஜி - **416.230.1107**

**PARAM GNANASWARAN**
Broker
**HOME LIFE GTA REALTY INC.** Brokerage*
**Office East:** 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
**416.321.6969**
**Office West:** 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
**905.712.2666**
* INDEPENDENTLY OWNED AND OPERATED
paramg@gmail.com

# தனித்துவமான சுயத்தை அங்கீகரித்தல்

நான் உண்மையில் எப்படிப்பட்டவன் / எப்படிப்பட்டவள் என்பதைப் பிறர் அறிந்தாலும் அவர்கள் என்னை விரும்புவார்கள்.

உனது குற்றங்குறைகளை மற்றவர் சுட்டிக்காட்டுவதால் மனம் புண்பட்டு காயப்பட நீ ஒப்புக்கொண்டு உடன்பட்டாலொழிய, உன்னை நீயே ஒருபோதும் நம்பமாட்டாய். உன்னால் எதையெல்லாம் சாதிக்க முடியும், எவ்வளவு தூரம் முன்னேறமுடியும் என்பதும் உனக்குத் தெரிய வராது. எது உன்னை ஊக்குவிக்கும், எது உன்னைச் சோர்வடையச் செய்யும் என்பது உனக்குப் புரியாது. உனது முகமூடியையும் தற்காப்புக் கவசங்களையும் அகற்றினாலொழிய, உனது குறிக்கோளை அடைந்திட எவ்வளவு தூரம் நீ முயற்சிக்கலாம் என்பது உனக்குப் புரியாது. இலக்கை அடைந்ததும் அங்கிருப்பவரையும் அடுத்து வரப்போவதையும் எவ்வாறு கையாள்வது சமாளிப்பது என்பதும் உனக்குத் தெரிய வராது.

உனக்குத் தெரியாதவற்றை மற்றவர்களிடம் இதை எப்படிச் செய்வது என்பதோ, அங்கு எப்படிப் போவது என்பதோ எனக்குத் தெரியாது. ஆனாலும் நான் அங்கு போகத்தான் போகிறேன் என நீ ஒப்புக்கொண்டு அவர்களின் விமர்சனத்தினால் காயப்பட உடன்படாவிட்டால் இலக்கை அடைந்தபின் அங்குள்ளவர்களின் நடவடிக்கைகளை சமாளிக்க உன்னால் முடியாது. பிறருக்குப் பிரயோசனப்படுத்துவதற்காகத் தவறு செய்து, புத்தியில்லாத மூடயென்மம் என பேரெடுத்து இடறிக் கீழே விழுந்து எழும்போது தட்டித்தடுமாறி தடம் புரளாவிட்டால் நீ எவ்வளவு உறுதியானவன், நம்பிக்கைக்கு உகந்தவன் என்பது உனக்குத் தெரிய வராது. தவறு செய்த பின் அதைச் சமாளிக்கும் போது நீ எவ்வளவு பலசாலி



என்பது உனக்குத் தெரியா விட்டால், உனது சக்தி உருவாக்கும் பிரதிபலனைப் பெறமாட்டாய். மேலும் போலியற்ற உனது சுயத்தின் அழகை அறிந்து கொள்ளமாட்டாய். குற்றங்குறையுள்ள உனது சுயத்தின் மூலமாகத்தான் உனது உண்மையான சகத்தியையும், ஆளுமையின் அழகையும் உலகம் நேருக்கு நேராகக் கண்டுகொள்ளும்.

'எனக்கு இது தெரியாது'. 'அதைச் செய்ய முடியாது.' என உனது உண்மையான சுயரூபத்தை பிறருக்கு வெளிப்படுத்த இன்றுவரை நீ அச்சப்பட்டிக் கொண்டிருந்திருக்கலாம். இன்று ஒரேயொருவரால் காயப்பட ஆயத்தப்படுத்து. அது யார் தெரியுமா? அந்த நபர் நீ தான்!

பிறர் உதவியுடனும் சுய அலசல் மூலமும் எனது குற்றங்குறைகளை உணர்ந்து உள்ளபடியே என்னை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள இன்று நான் தீர்மானிக்கின்றேன்.

அதைமட்டும் தைரியத்துடன் நீ உபயோகித்தால் உனது ஜீவியத்தையே உடனடியாகத் திசை திருப்பக் கூடிய பாரிய சக்தி வாய்ந்த உறுதிப்பாடு ஒன்று இருக்கிறது. அது என்ன தெரியுமா? "நான் இருக்கிறேன்!" என்பது தான் அது! எனக்கு விருப்பமாயிருக்கிறது அல்லது எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லாதே! நான் முயற்சி செய்கிறேன்! ஆம்! இது தான் சரி! அது தான் எனக்கு வேண்டும். அல்லது எனது ஆசை அதுதான் என்று கூறாதே!. வெட்கத்தை விட்டு வாய்திறந்து உரக்கக் கூவு "நான் வாழ்கிறேன்". ஆம்! நான் நல்லவன், நல்லவள்! விருப்பத்துடன் நான் செய்யும் சகல நன்மைகளையும், திறமையாகச் செய்கிறேன். ஆகவே எனக்குத் திரும்பி வரும் நன்மைகளையும் பெற்றுக்கொள்ளவும் எனது இதயம் திறந்திருக்கின்றது. அவ்வளவு நல்லவனாக நான் வாழ்வதனால் என்னை வந்தடை-வதற்காக நன்மை என்னைத் தேடி அலைகின்றது என்றால் அது நல்லது தானே! வாழ்வின் சகல கோணங்களிலிருந்தும் மேலும் மேலும் நன்மைகளை இப்போ நான் பெறுகின்றேன். இப்போ இதை கொஞ்சம் பாருங்கள். என்னைச் சூழ்திருக்கும் நன்மைகளிற்கும், ஆசீர்வாதங்களிற்கும் நன்றி. எனது சகல நல்ல சந்தர்ப்பங்களிற்கும் நன்றி. நல்ல அநுபவங்களிற்கும் நன்றி. சகலவற்றையும் நான் திறமையுடன் செய்வேன். நான் செய்யும் நன்மை எனக்கும் புத்துயிர் ஊட்டுகின்றது. இத்தகைய நல்லவானாயிருப்பதால் ஏற்படும் புளகாங்கிதம் என்னை மயிர்க்கூச்செறியப்பண்ணுகின்றது. சக்தி வாய்ந்த அதிகாரப் பரவலில் எனது திறமை, என்னையே ஆச்சரியப்பட வைக்கிறது.

இப்போ இதைப் பாருங்கள். நன்மை என்னைச் சூழ்ந்திருக்கின்றது. நன்மை என்னை மூழ்கடிக்கின்றது. முற்றுமுழுதாய் நன்மையாகவே நான் மாறிவிட்டேன். எனது உள்ளும் புறமும் நன்மை தான். நான் செய்யும் இத்தனை நன்மைகளிற்கும் சிறந்த கைமாறுகள் எனக்குக் கிடைக்கின்றன. நான் நன்மைகளை அள்ளி அள்ளிக் கொடுக்க எனக்கும் திரும்பத் திரும்ப மேன்மேலும் நன்மைகள் கிடைக்கின்றன. இத்தனைக்கும் நான் யார் இப்படி நல்லவனாய் இருக்க? உன்னிடம் இல்லாதவை என நீ நம்பியவற்றை ஒன்று திரட்டிப் பார்ப்பதில் மட்டுமே இன்றுவரை நீ காலத்தைக் கழித்திருக்கலாம். இன்று நீ உண்மையில் நல்லதோர் ஆத்மா என்பதை உறுதிப்படுத்த உன்னைப்பற்றி நன்மைகளை எல்லாம் ஒரு Tape Recorder இல் பதிவு செய், அல்லது எழுதிவை. இந்த Tape ஐ திரும்பத் திரும்ப கேள். அல்லது எழுதியவற்றைத் திரும்பத் திரும்ப வாசி. உனது பிரக்ஞைக்குள் பதியுமட்டும் இதைத் திரும்பத் திரும்பச் செய். அப்போது நன்மை உனது பிரக்ஞையிலிருந்து உனது வாழ்வினுள் சிதறி உன்னை மகிழப்பண்ணும்.

நான் எத்துணை நல்லதோர் ஆத்மா என்பதை உணர்ந்து அதை ஒப்புக்கொண்டு கொண்டாடுவதில் இன்று முதல் ஈடுபடுகின்றேன்.

**ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 107**

*மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214*



**லலிதா புரூடி**

# சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பில் ஒரு முன்னேற்றம்

கடந்த நூற்றாண்டில் பொறியியலாளர்களின் முக்கிய பணி மக்களை இயற்கையிலிருந்து பாதுகாப்பதாக இருந்தது. அதாவது இயற்கையின் வெப்பம் குளிர் போன்றவற்றில் இருந்து மக்களை பாதுகாத்து சீவிக்க வைக்க விதம் விதமான கட்டிடங்கள், வீடுகள், வாகனங்களை செய்வதே பொறியியலாளர்களின் வேலையாக இருந்தது. ஆனால் இந்த நூற்றாண்டில் பொறியியலாளர்களின் முக்கிய பணி மக்களிடமிருந்து இயற்கையை காப்பாற்றுவதாக இருக்கிறது. அதாவது பூமியில் உள்ள கனிவளங்கள் முடிவதை தடுப்பது, சுற்றுப்புற சூழல் மாசு அடைவதை தவிர்ப்பது போன்றவையே பொறியிலாளர்களின் முக்கிய பணியாக இருக்கிறது, இருக்கப்போகிறது.

சுற்றுப்புற சூழலை மாசு அடைய செய்வதில் வாகனங்களில் இருந்து வரும் புகை மிகப் பெரிய பங்கை வகிக்கிறது. இதை எவ்வாறு நிறுத்தலாம் அல்லது குறைக்கலாம் என தொழில்நுட்பத்துறையிலும் விஞ்ஞான ஆராய்ச்சி துறையிலும் மிகவும் முன்னேறிய இரண்டு அமெரிக்க நிறுவனங்கள் கடந்த பல வருடங்களாக ஆய்வுகளை நடத்தி வருகின்றன. வருடம் தோறும் 800 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான வாகன உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் Arvin Meritor Inc. என்ற நிறுவனமும் Massachusetts Institute of Technology (MIT) பல்கலைக்கழகமுமே இந்த இரண்டு அமெரிக்க நிறுவனங்களாகும்.



Arvin Meritor கடந்த பல ஆண்டுகளாக சூழல் மாசு அடைவதை குறைக்க கூடிய பல பொருட்களை சந்தைப்படுத்தி வந்திருக்கிறார்கள். இவர்கள் MIT உடன் செய்த ஆராய்ச்சியின் பயனாக வந்ததே தற்போது கார்களில் புகையுடன் வெளியேறும் சுற்றாடலை மாசுபடுத்தும் பொருட்களை குறைக்க உதவும். "Catalytic Converters" ஆகும்.

இந்த இரண்டு நிறுவனங்களினதும் தற்போதைய கண்டுபிடிப்பு "Catalytic Converters" இலும் ஒருபடி கூடியது. இது பாரிய டீசல் வாகனங்களின் புகையுடன் வெளியேறும் சுற்றாடலை மாசுபடுத்தும் பொருட்களை குறைக்க உதவக்கூடியது. இது "Plasma fuel reformer" எனப்படும்.

Arvin Meritor இன் நிர்வாகிகளில் ஒருவரான பில் ரெயிலர் (Bill Taylor) கூறுகையில் டீசல் புகையில் வெளியாகும் நைதரசன் ஒட்சைட்டுகள் (Nox) மற்றும் ஐதரோகாபன்கள் (Hydro Carbons) இரண்டுமே சுற்றாடலுக்கு அதிக கேடு விளைவிப்பனவாகும். Plasma fuel refomer இனால் எரிபொருளில் ஐதரன் செறிவை கூட்டி இந்த சுற்றாடலை மாசுபடுத்தும் பொருட்களை சுற்றாடலுக்கு ஏற்ற பொருட்களாக மாற்றி வெளியேற்றலாம் என்கிறார். பில் மேலும் கூறுகையில் இந்த முறையில் ஒரு நல்ல பக்க விளைவும் ஏற்படுகிறது என்கிறார். அதாவது வாகனங்கள் குறைந்த எரிபொருளில் கூடிய தூரம் செல்லக்கூடியனவாகவும் (More fuel - Efficient) மாறுகின்றன என்கிறார் பில்.

இந்த இரண்டு நிறுவனங்களினதும் கூட்டுத் தயாரிப்பில் செய்யப்பட்ட ஒரு மாதிரி (Prototype) பேருந்து வண்டி ஒன்று (டீசல் வாகனம்) Columbus இல் உள்ள தொழில் நுட்பக்கல்லூரியில் தற்போது பாவனையில் உள்ளது.

இன்னும் ஆறு வருடங்களில் அமெரிக்க மாசு கட்டுப்பாட்டு வாரியத்தினால் கொண்டுவரப்பட இருக்கும் வாகனங்களில் இருந்து வெளியாகும் புகையில் இருக்கும் சுற்றாடலை மாசுபடுத்தும் பொருட்களை மட்டுப்படுத்தும் கடும் சட்டத்திற்கு இவர்களின் புதிய வாகனம் இலகுவில் அனுமதியை பெற்றுவிடும் என்கிறது Arvin Meritor.

தற்கால ஆங்கிலப் படங்களில் சத்தமில்லாமல் புகை ஒன்றும் இல்லாமல் நிலத்தை தொட்டும் தொடாமல் மெதுவாக வந்து பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்லும் பேருந்து போன்றவை நிஜ உலகில் வருவதுக்கு வெகுதூரம் இல்லை என்பதற்கு Columbus இல் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் ஓடிக் கொண்டிருக்கும் இந்த நிறுவனங்களின் மாதிரி பேருந்து சாட்சியாக இருக்கிறது.

நன்றி: Fortune
தமிழாக்கம்: சிவ. ஞானநாயகன்.

# 21 ஆண்டுகளுக்கு பின்பு தொடரை வென்றது இந்தியா!

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி மூன்று ரெஸ்ற் போட்டியிகளில் பங்கேற்கிறது. லார்ட்சில் நடந்த முதல் ரெஸ்ற் சமன் ஆனது. டிரன்ட் பிரிட்ஜ் போட்டியில் வென்ற இந்திய அணி 1 - 0 என்ற முன்னிலை பெற்றது. மிக முக்கியமான மூன்றாவது ரெஸ்ற் ஓவலில் நடக்கிறது. 21 ஆண்டுகளுக்கு பிறகு இங்கிலாந்து மண்ணில் தொடரை வெல்லும் கனவுடன் களமிறங்கிய இந்திய அணி அசத்தலாக ஆடியது. ஓவல் ரெஸ்ரில் இந்திய அணி ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இதன் மூலம் 21 ஆண்டுக்கு பின் இங்கிலாந்து மண்ணில் ரெஸ்ற் தொடரை வெல்லும் வாய்ப்பை அதிகரித்துக்கொண்டது. 1986ஆம் ஆண்டு கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி முதலிரண்டு ரெஸ்ரை வென்றது. மூன்றாவதையும் கைப்பற்றி தொடரை அப்படியே அள்ளலாம் என நினைத்த போது அப்போட்டியின் இரண்டாவது இன்னிங்சில் விக்கெட்டுகளை விரைவாக இழந்தது. இதனால் போட்டியை 'சமன்' செய்ய வேண்டிய நிலைமைக்கு ஆளானது.

முதல் ரெஸ்ற் போட்டியில் மழையின் கருணையால் இந்தியா தப்பி பிழைத்து ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடிந்துள்ளது. இரண்டாவது ரெஸ்ற் வெற்றி பெற்றது. மிக முக்கியமான மூன்றாவது ரெஸ்ற் ஓவலில் நடக்கிறது. கும்ளே சதம் அடிக்க, இந்திய அணி முதல் இன்னிங்சில் 664 ஓட்டங்கள் குவித்தது. 465 ஓட்டங்கள் எடுத்தால் மட்டுமே ஃபாலோ ஆன் தவிர்க்க முடியும் என்ற இக்கட்டான நிலையில் இங்கிலாந்து களமிறங்கியது.

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது கிரிக்கெட் ரெஸ்ற் போட்டி பரபரப்பான கட்டத்தை எட்டியது. இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியுள்ள இங்கிலாந்து அணிக்கு 500 ஓட்டங்கள் இலக்கை இந்திய அணி நிர்ணயித்துள்ளது.

ஓவல் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடந்த நான்காம் நாள் ஆட்டத்தில், எதிரணிக்கு ஃபாலோ ஆனை நிர்ப்பந்திக்காமல் இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிய இந்திய அணி, தேநீர் இடைவேளையின் போது ஆறு விக்கெட் இழப்புக்கு 180 ஓட்டங்களைச் சேர்ந்து டிக்ளேர் செய்தது. மொத்தத்தில் இங்கிலாந்தின் முதல் இன்னிங்ஸைக் காட்டிலும் 499 ஓட்டங்களை முன்னிலை பெற்றது.

**தொடக்கத்தில் சரிவு** - இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி 11 ஓட்டங்களைச் சேர்ப்பதற்குள் மூன்று விக்கெட்டுகளை அடுத்தடுத்து இழந்தது. தொடக்க வீரர் வாசிம் ஜாஃபர் டக் அவுட் ஆனார். அவரைத் தொடர்ந்து தினேஷ் கார்த்திக் எட்டு ஓட்டங்களில் வெளியேறினார். ஒரு ஓட்டம் எடுத்திருந்த டெண்டுல்கர் ஆண்டர்சன் பந்தில் கிளீன்போல்டு ஆனார்.

அதன் பின்னர் கங்குலி, திராவிட் ஜோடி அணியை சரிவிலிருந்து மீட்டது. காலிங்வுட் வீசிய பந்தில் ஸ்ட்ராஸிடம் கேட்ச் கொடுத்து 57 ஓட்டங்களுடன் கங்குலி வெளியேறினார். அதில் ஒன்பது பவுண்டரிகளும் அடங்கும். அவரைத் தொடர்ந்து திராவிட் 12 ஓட்டங்களில் ஐந்தாவது விக்கெட்டாக வீழ்ந்தார். இதற்காக அவர் 96 பந்துகளை எதிர்கொண்டது குறிப்பிடத்தக்கது. தோனி 36 ஓட்டங்களில் ட்ரெம்லெட் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அதன்பின்னர் லக்மணன் 46 ஓட்டங்களுடனும், கும்ப்ளே எட்டு ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருந்தபோது இரண்டாவது இன்னிங்ஸை இந்தியா டிக்ளேர் செய்தது. இங்கிலாந்து தரப்பில் ஆண்டர்சன், காலிவுட், ட்ரெம்லெட் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

**இங்கிலாந்து 345** - முன்னதாக ஒன்பது விக்கெட் இழப்புக்கு 326 ஓட்டங்கள் என்ற நிலையுடன் ஞாயிற்றுக்கிழமை முதலாவது இன்னிங்ஸை தொடர்ந்த இங்கிலாந்து அணி, மேலும் 19 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தது.

இந்தியாவின் முதல் இன்னிங்சைக் காட்டிலும் 319 ஓட்டங்கள் பின்னடைவு பெற்றது இங்கிலாந்து. ஃபாலோ ஆனைத் தவிர்ப்பதற்கே 120 ஓட்டங்கள் அந்த அணிக்கு மேலும் தேவையாக இருந்தது. ஆனால் இந்திய அணியின் தலைவர் திராவிட் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. எதிரணியை ஃபாலோ ஆன் நிர்ப்பந்திக்காமல் இரண்டாவது இன்னிங்ஸை தொடங்குவதாக அறிவித்தார்.

6 விக்கெட்டை இழந்து 180 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இந்தியா தனது ஆட்டத்தை முடித்துக்கொண்டது. இங்கிலாந்து கடின இலக்கை எட்டாமல் ஆட்டத்தை வெற்றி தோல்வி இன்றி முடித்துள்ளது. இங்கிலாந்து மண்ணில் இந்தியா 21 வருடங்களுக்கு பின்பு தொடரை 1 - 0 என கைப்பற்றியது.

## அனில் கும்ளே சாதனை

ரெஸ்ற்றில் நிச்சயம் சதம் கடப்பேன் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் மிகவும் ஸ்பெஷலான இந்த சதம் கொஞ்சம் தாமதமாக கிடைத்துள்ளது என்கிறார் அனில் கும்ளே.

ஓவல் ரெஸ்ரின் இரண்டாவது நாளில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே முன்னணி பேட்ஸ்மேன் போல் விளையாடியது தனது முதல் சதம் கடந்து அசத்தினார். இம்மகிழ்ச்சியில் அவர் அளித்த பேட்டி.

ரெஸ்ரில் சதம் கடக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. 10 ஆண்டுகளுக்கு முன் தென் ஆபிரிக்காவுக்கு எதிரான கொல்கத்தா ரெஸ்ரில் சதத்தை நெருங்கிய நிலையில் (88 ஓட்டம்) அவுட்டானேன். முதல் சதம் 118வது ரெஸ்ரில் கிடைத்துள்ளது. இது மிகவும் ஸ்பெஷலானது. மனநிறைவை தந்துள்ளது. ஆனால் இது சற்று தாமதமாக கிடைத்துள்ளது. இப்போட்டியை வெல்ல வேண்டும் என்ற நோக்கத்துடன் களமிறங்கினோம். இப்போட்டிக்கு முன்னதாக நடந்த அணி கூட்டத்தில் இந்திய வீரர் ஒருவராவது இத்தொடர் முடிவதற்குள் சதம் கடக்க வேண்டும் எனக் கூறினேன். ஆனால், அதை நானே செய்வேன் என எண்ணிப் பார்க்கவில்லை. தேநீர் இடைவேளையின் போது 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தேன். அப்போது வேடிக்கைக்காக சதம் அடிக்கப் போவதாக கூறினேன். அது நிஜமாகி விட்டது.

### '900' விக்கெட்

இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கேல் வானின் விக்கெட் வீழ்த்தி, சர்வதேச அரங்கில் 900 விக்கெட் (ரெஸ்ற் 563, ஒரு நாள் போட்டி 337) என்ற மைல் கல்லை கடந்தார் அனில் கும்ளே. இச்சாதனை செய்த முதல் இந்தியர் என்ற பெருமையும் பெற்றார்.

**முதல் நான்கு TOP 4 வீரர்கள் ரெஸ்ற் போட்டிகள்**

| வீரர் | போட்டி | விக்கெட் | சிறந்த பந்து வீச்சு |
|---|---|---|---|
| லார்ன் (அவு.) | 145 | 708 | 8/71 |
| முரளிதரன் (இலங்கை) | 113 | 700 | 9/51 |
| கும்ளே (இந்தியா) | 118 | 563 | 10/74 |
| மெக்ராத் (அவு.) | 124 | 563 | 8/24 |

## Twent 20 உலக கோப்பை இலங்கை அணி அறிவிப்பு

Twent 20 உலக கோப்பை தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது. தென் ஆபிரிக்காவில் அடுத்த மாதம் 11 திகதி Twent 20 உலக கோப்பை தொடர் நடக்கிறது. மொத்தம் 12 நாடுகள் பங்கேற்கும் இத்தொடரின் 'சி' பிரிவில் நியூசிலாந்து மற்றும் கென்யா அணிகளுடன் இலங்கை இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் இத்தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

முரளிதரன், ஜெயசூரியா, வாஸ் என வலிமையான அணியுடன் களமிறங்குகிறது. சமீபத்தில் தேசிய அணியிலிருந்து விலகிய அட்டப்பட்டுவின் இடத்தை ஜீகன் முபாரக் பிடித்துள்ளார்.

**அணி** - மகிலா ஜெயவர்த்னா (அணித்தலைவர்), சனத் ஜெயசூரியா, உபுல் தரங்கா, குமார் சங்கக்கரா, தில்ஷன் திலகரத்னே, சமரசில்வா, சமிந்தா வாஸ், பர்வேஸ் மகரூப், முத்தைய முரளிதரன், லசித் மலிங்கா, தில்காரா பெர்னாண்டோ, ஹசந்தா பெர்னாண்டோ, கயன் விஜிகுன், கவுசல் லோகுராச்சி, ஜீகன் முபாரக்.

## விளையாட்டுத் தகவல்கள் 219

### நியூசிலாந்து அணி

**பிளமிங் நீக்கம்** - Twent 20 தொடருக்கான நியூசிலாந்து அணியும் நேற்று வெல்லிங்டனில் அறிவிக்கப்பட்டது. சுழற்பந்து வீச்சாளர் டேனியல் வெட்டோரி அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை அணித்தலைவராக செயல்பட்டு வந்த ஸ்டீபன் பிளமிங்கிற்கு அணியில் இடம் கிடைக்கவில்லை.

அணி - வெட்டோரி (அணித்தலைவர்), ஷேன் பாண்ட், கிரெக் மெக்மிலம், ஓரம், ஸ்காட் ஸ்டைரிஸ், ரோஸ் டெய்லர், லூ வின் சென்ட், ஜீதன் படேல், புல்டன், மார்க்கில்லஸ்பி, ஹரத் ஹாப்கின்ஸ், கிறிஸ் மார்டின், பிராட்லி ஸ்காட்.

### இந்திய அணி

அறிமுக Twent 20 உலக கோப்பைக்கான இந்திய அணியின் அணித்தலைவராக மகேந்திரசிங் தோனி நியமிக்கப்பட்டுள்ளார். சேவக், இர்பதான், ஹர்பஜன் ஆகியோர் மீண்டும் வாய்ப்பு பெற்றுள்ளனர். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சுரேஷ் ரெய்னா, முகமது கைப் மீண்டும் ஒருமுறை புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

உத்தேச அணி கடந்த மாதம் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் தொடருக்கான 15 பேர் கொண்ட இறுதி அணி மும்பையில் தேர்வு செய்யப்பட்டது. சச்சின் விலகல் - இந்திய அணியின் முன்னணி வீரர்களான சச்சின், அணித்தலைவர் டிராவிட், கங்குலி ஆகியோர் இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில், Twent 20 உலககோப்பைக்கான அணித் தேர்விலிருந்து தாமாகவே முன்வந்து விலகினர். இந்த சூழலில் அணித்தலைவராக விக்கெட் கீப்பர் மற்றும் அதிரடி பேட்ஸ்மேன் மகேந்திரசிங் தோனி தேர்வு செய்யப்பட்டுள்ளார். யுவராஜ் சிங்கிற்கு துணை அணித்தலைவர் பதவி வழங்கப்பட்டது. மோசமான பார்ம் காரணமாக இங்கிலாந்து தொடரில் புறக்கணிக்கப்பட்ட சேவக், ஹர்பஜன் இருவரும் Twent 20 உலக கோப்பையில் தங்களது இடத்தை உறுதி செய்துள்ளனர். அதிரடி பேட்ஸ்மேனாக சேவக் தனது திறமையை இந்த தொடரிலாவது காட்ட வேண்டும். கடந்த ஏழாம் மாதமாக அணியில் வாய்ப்பு கிடைக்காமல் தவித்து வந்த ஆல் ரவுண்டர் இர்பான் பதானுக்கு இந்த முறை இடம் கிடைத்துள்ளது.

இளம் வீரர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து தேர்வு செய்யப்பட்டுள்ள Twent 20 அணியில், அறிமுக வீரராக இர்பான் பதானின் சகோதரர் ஆல் ரவுண்டர் யூசுப் பதான் இடம் பெற்றுள்ளார். 20 ஓவர் கொண்ட போட்டிகள் என்பதால், அதிரடி பேட்ஸ்மேன்களையே தேர்வுக்குழு தேர்ந்தெடுத்துள்ளது. உத்தப்பா, கவுதம் காம்பிர், தினேஷ், கார்த்திக் என பேட்டிங் வரிசை பலப்படுத்தப்பட்டுள்ளது. வேகப்பந்து வீச்சில் வலு சேர்க்க ஹரியானாவின் ஜோகிந்தர் சர்மா, அகார்கர், ஸ்ரீசாந்த், ஆர்.பி.சிங் இடம்பெற்றுள்ளனர். ஆல் ரவுண்டர் ரோகித் சர்மா, இளம் சுழற்பந்து வீச்சாளர் பியுஸ் சாவ்லாவுக்கு அணியில் வாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

வழக்கம் போல இந்த முறையும் முகமது கைப்புக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. அதிகம் எதிர்பார்க்கப்பட்ட சுரேஷ் ரெய்னாவும் இல்லை. இங்கிலாந்து தொடரில் அசத்தி வரும் ஜாகிர் கானுக்கு Twent 20 உலக கோப்பையில் ஓய்வு அளிக்கப்பட்டது.

Twent 20 உலககோப்பைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 15 பேர் கொண்ட அணி - மகேந்திரசிங் தோனி (அணித்தலைவர்), யுவராஜ் சிங் (துணை அணித்தலைவர்), சேவக், தினேஷ் கார்த்திக், ராபின் உத்தப்பா, கவுதம் காம்பிர், இர்பான் பதான், யூசுப் பதான், ஜோகிந்தர் சர்மா, அகார்கர், ஆர்.பி.சிங், ஸ்ரீசாந்த், ரோகித் சர்மா, பியுஸ் சாவ்லா மற்றும் ஹர்பஜன் சிங்.



**எஸ். கணேஷ்**




**Raphael Maharaja**

Barrister, Solicitor & Notary Public

**Tel: 416-847-7077** **Fax: 416-847-7088**

211 – 2425 Eglinton Avenue East, Scarborough, ON M1K 5G8

**கனேடிய தமிழ் வழக்கறிஞர்**



# வீட்டின் விலை, நிலைமை கனடா Vs அமெரிக்கா

ஆகஸ்ட் மாதம் 2007ஆம் ஆண்டு தொடக்கம், கனடிய பொருளாதாரச் சந்தையில் (stock market) மிகப்பெரிய விழுக்காடு ஏற்பட்டு வருவதை, பங்குச்சந்தையுடன் தொடர்பு உடையவர்களால் காணக்கூடியதாக உள்ளது. ஆரம்பத்தில் அமெரிக்காவில் தொடங்கி இன்று உலகத்தையே உலுக்கியுள்ளது.

கடந்த இரு கிழமைகளாக, மேலும் கீழுமாக பங்குச்சந்தை போய் வருவதைக் காணக்கூடியதாக இருந்தபோதும் கீழ் நோக்கியதே அதிகமாகக் காணப்படுகின்றது. முக்கியமாக ஆகஸ்ட் 7இலிருந்து ஆகஸ்ட் 10வரை பங்குச்சந்தையில் பாரிய வீழ்ச்சி காணப்பட்டது. இதற்கு அமெரிக்காவில் வீட்டுச்சந்தையில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி. Subprime என்று அழைக்கப்படும் அடமானக்கடனே (Subprime Mortgae) காரணமாகக் கூறப்படுகின்றது. Subprime என்று அழைக்கப்படும் மோட்கேஜ் அமெரிக்க நிதி நிறுவனங்களால் வீடு வாங்கியவர்களிற்கு கொடுக்கப்பட்ட அடமானக் கடனாகும். கடந்த பல வருடங்களாக அமெரிக்காவில் ஏற்பட்ட வீட்டின் விலை அதிகரிப்பால், கடன் வழங்கிய நிதி நிறுவனங்கள், பொதுவாக சகலரிற்கும் மோட்கேஜ் கடனைக் கொடுத்துள்ளது. No credit, No problem என்பது போல. அதாவது போதியளவு உறுதிப்பாடு இல்லாமல் கடனைக் கொடுத்துள்ளது. வீட்டின் விலையின் அதிகரிப்பாலும், போதியளவு உறுதிப்பாடும் இல்லாமல் உதாரணமாக Credit check, income verification) மோட்கேஜ் கொடுக்கும் நிறுவனங்கள் பணத்தை வாரி வழங்கியிருந்தது. எவரும் மோட்கேஜ் எடுக்கலாம் என்ற நிலை இருந்தது. 68 வீதமான அமெரிக்ககுடும்பங்கள் இன்று வீடுகளை வைத்திருக்கின்றனர்.

கடந்த மூன்று வருடங்களாக அமெரிக்காவின் அனேமான மாநிலங்களில் ஏற்பட்ட வீட்டின் வீழ்ச்சி, வேலை இழந்தோர், இழப்போரின் எண்ணிக்கை கடன் பெற்றோர்கள் தமது கடனிற்குரிய மாதாந்த கொடுப்பனவை கொடுக்கமுடியாத நிலைமைக்கு தள்ளிவிட்டது. மற்றும், வீட்டின் பெறுமதி, வீட்டின் மீது போடப்பட்டுள்ள அடமானக்கடனை விட குறைவாகவும் காணப்படுவதால் பலர் தமது கடனைத்திருப்பி செலுத்துவதை நிறுத்தி விட்டார்கள். இதனால் கடன் வழங்கும் நிதிநிறுவனங்கள் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளன. இன்று அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களிலும் மொத்தமாக 20 வீதமான வீட்டு உரிமையாளர் அடமானக்கடனைச் செலுத்தாமல் உள்ளார்கள். கடன்வழங்கிய, கடனுடன் தொடர்புடைய நிறுவனங்களின் பங்குச்சந்தை மதிப்பில் (stock price) பாரிய வீழ்ச்சி ஏற்படத் தொடங்கியது. இந்நிலைமை ஆரம்பத்தில் அமெரிக்காவில் மட்டும் தொடங்கி, இப்பொழுது கனடா, ஐரோப்பா ஆசியா வரை தாவியுள்ளது.

இந்த நாடுகளின் மத்திய வங்கிகள் தமது திறைசேரியிலிருந்து போதியளவு பணத்தைச் செலுத்தி பங்குச்சந்தை மதிப்பில் (stock price) நிலைமையை சமநிலை செய்ய எத்தனிப்பதைக் காணலாம். உதாரணமாக ஆகஸ்ட் 9, 10ஆம் திகதிகளில் அமெரிக்க அரசு 40 பில்லியனுக்கு மேற்பட்ட பணத்தை செலுத்தி பங்குச்சந்தையை ஸ்திரப்படுத்த உதவியுள்ளது. இதில் கடந்த வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 7இல் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளது.

இவ்வாறு திறைசேரியிலிருந்து போதியளவு பணத்தை பங்குச்சந்தைக்கு மாற்றிய நிலை, சரித்திரத்திலே மூன்றாவது தடவையாக நடந்துள்ளது. முதலாவதாக 1987 ஒக்டோபர் 25 இலும், இரண்டாவதாக 911 என அழைக்கப்படும் 2001 செப்ரெம்பர் 11 இலும் இப்பொழுது மூன்றாவது தடவை இந்தக்கிழமையும் நடந்துள்ளது. எதிர்வரும் கிழமைகளில் பங்குச்சந்தையிலும், Subprime அடமானத்திலும், வீட்டின் விலையிலும் என்ன நடைபெறலாம்?

அமெரிக்காவில் ஏற்பட்ட Subprime mortgage நிலைமை கனடாவிலும் ஏற்படுமா? இப்பொழுதுள்ள நிலைமையில் கனடாவின் வீட்டின் நிலைமை அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது, மூன்று வருடம் பிந்தியதாகவே காணப்படுகின்றது.

அமெரிக்காவில் Subprime mortgage போல கனடாவில் அண்மைக்காலமாக அனேகமாக முதல்தர நிதி நிறுவனங்கள் A lenders - alternative Lending என்ற முறையை கொண்டுவந்துள்ளன. உதாரணமாக முதல்தரம் அல்லது 'A' நிதி நிறுவனம் என்று கூறப்படும் முதல்தர வங்கிகள் Credit நிலைமை, Employment History, Downpayment இல் இக்கட்டான வாடிக்கையாளர்களுக்கு வீட்டு மோட்கேஜ் வியாபாரத்தை இழக்கக்கூடாது என்பதற்காக, உருவாக்கப்பட்டதே "Alternative Lending" இருந்தும், இந்த முறையில் மோட்கேஜ் கடன் பெறும்போது, ஓரளவு உறுதிப்பாடு செய்யப்பட்டே கடன் வழங்கப்படுகின்றது.

அமெரிக்காவில் கொடுக்கப்பட்டது போல இலகுவாக இருக்காது. பொதுவாக வட்டி வீதமும் அதிகமாகக் காணப்படுகின்றது. அமெரிக்காவில் ஏற்பட்டது போல கொடுக்கப்பட்டது போல் இலேசாக அல்ல. என்ன Subprime நிலைமை இங்கு ஏற்படுமா? சிலகாலங்களிற்கு பிற்பாடு சிறிதளவு ஏற்படலாம். ஏற்பட்டாலும், அமெரிக்காவில் ஏற்பட்டது போல் பாரியளவு ஏற்படும் என்று கூறமுடியாது. இதற்கு கனடிய பொருளாதார கட்டமைப்பின் நிலைமையைக் கூறலாம். பொதுவாக ரொறொன்ரோவின் நிலைமை ஆரோக்கியமாக காணப்படுவதைக் காணலாம். கனடிய மேற்கு மாகாணங்களின் நிலைமைகள் சற்று வித்தியாசம். அங்கே வீட்டின் விலைகள் ஏற்கனவே அதீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சாதாரண மக்களால் வீடு வாங்குவது முயல் கொம்புபோன்றது. மற்றும் மாதா வருமானத்தின் பெரும்பகுதி அடமானத்திற்கே செல்கின்றது.

ரொறொன்ரோவின் நிலைமை அண்மைக்காலங்களாக தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. உதாரணமாக யூலை மாதம் வீட்டு வியாபாரத்தில் மிக மந்தமான காலம். ஆனால் இந்த வருட யூலை (2007) யூலை, மாதங்களிலே சாதனை புரிந்துள்ளது.

| மாதம் | TREB இனால் கை மாறிய வீடுகள் | சராசரி விலை |
|---|---|---|
| யூலை 2003 | 8084 | $289,880 |
| யூலை 2004 | 7329 | $312,418 |
| யூலை 2005 | 7387 | $326,034 |
| யூலை 2006 | 7082 | $342,034 |
| யூலை 2007 | 8912 | $366,012 |

மேலுள்ள பட்டியலில் காட்டப்பட்டது போல், யூலை 2007, வியாபாத்திலே அது சிறந்த காணப்படுகின்றது. 8,000 இற்கு மேலான வீடுகள் கைமாறப்பட்டுள்ளது. இது ஒரு சாதனை.

கடந்த நாலு மாதங்களாக வீட்டு விற்பனையில் சாதனைகள் பல நடக்கின்றன. இருந்தும், யூலை 2007இல் வீட்டின் விலையில் 2% இறக்கம் ஏற்பட்டுள்ளது. (சராசரி விலை $366,012) வேலை இல்லாமல் இருப்போரின் எண்ணிக்கையும் (Unemployment rate) யூன் 2007 இலிருந்து யூலை 2007 6.1% இலிருந்து 6.0% ஆகவும் குறைந்துள்ளது. இது பொருளாதார வளர்ச்சியைக் காட்டுகின்றது.

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 257**




ஸ்காபரோ, மிசிசாக இரு இடங்களில் சிறந்த சேவை

100இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

*Independently owned & operated

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)

1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969

145 Traders Blvd # 28, Mississauga - 905.712.2666

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

**House for sale**
- Middlefield & Highglen
- Over 3,150 sqft
- 5 bedroom house
- Finished bsmt/Sep. ent.
- Only $549,900

**Condo. for sale**
- Warden & Finch
- 3 bedrooms
- 2 washrooms
- Recently Renovated
- Asking $156, 900.

**New Commercial Condo. Available for sale or lease**
- GTA Square indoor mall @ Finch - Middlefield.
- Market East - Strip Plaza @ Steeles & Markham

**House for sale**
- Bellamy & Lawrence
- 3 bedroom + 2 bedroom bungalow house
- 2 kitchen
- Asking price $309,900

**House for Rent**
- Middlefield & Finch
- 3 bedroom
- 3 washroom
- Avail. September 01, 07
- Rent $1275

Nantha Aiyadurai

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service

OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# பசி

காடு மலை வான் வெளியில்
குயில் குரங்கு உயிரினங்கள்
சுதந்திரமாய் இரைதேடும்

மாரியும் கோடையும் மாறி மாறி
வட தென் முனை வெளியில்
பசி தணிக்கும்
பறவைத் தொடரணிகள்

கடற்கரை மணல் மேட்டில்
நாதியற்றுக் கிடக்கும் மீன்குடலை
தின்று வயிறு ஊதிப் பெருத்து
ஒய்யாரமாகப் படுத்திருந்து பல்லிளித்து
நாக்கை நீட்டி வாலை ஆட்டுகின்றன
நன்றியுள்ள நாய்ச் சிதறல்

அண்ட வெளியில் அயராது வியர்த்தொழுக
உருண்டோடும் மண்டபத்தில்
அரைச்சாண்
வயிற்றைக் கழுவப் பல தடைகள்.



முத்துராஜா

# திருமட்டுவில்

பண்: பழம்பஞ்சுரம்

எங்கும் எழவல்லார் எல்லாம் செயவல்லார்
துங்கத் திருமேனிச் சோதியனார் - பொங்கி
அருள்கின்றார் ஆன்றபுகழ் மட்டுவிலூர் அன்பர்
மருள்நீக்கி மாண்பு வர.

நட்டம் புரிநாதர் நற்றவத்து மட்டுவிலூர்
கொட்டி யருள்மழையைக் கூட்டுவதால் - எட்டுத்
திசையாரும் சேர்ந்திருக்கும் தீவினைகள் மாளக்
கசிவாக வேண்டுவரே காண்.

மங்கை இடப்பாகர் கங்கை தலைப்பாகர்
பங்கம் அறுக்கின்ற பண்பாளர் - தங்கிநிதம்
மட்டில்லாச் செல்வத்து மட்டுவிலூர் வாழ்வாரே
தொட்டன்பர் உள்ளம் துலக்கி.

ஆனை முகனைத்தந் தாண்ட அருளாளர்
மான மதிப்பார்ந்த மட்டுவிலூர் - ஆனமுதற்
காலமதாய்க் காத்துக் களித்தருள்வார் அன்பருந்
தூலவுருக் கண்டு தொழ.

ஐவரினால் ஆகும் அவலங்கள் தீர்த்தருள்வார்
மெய்வருந்தாக் கூலி மிகத்தருவார் -
பொய்யணுகா
மட்டுவிலூர் உள்ளார் அடியார் மனமுமுள்ளார்
எட்டியல்பு கொண்ட இறை.

ஆதியிலார் அந்தமிலார் அன்னைதந்தை
போன்றபெருங்
காதலினால் அன்பர்தமைக் காத்தருள்வார் -
ஏதமிலா
மட்டுவிலூர் வாழ்வார் மதிப்பறிந்து மெய்யடியார்
கொட்டுவரே கண்ணீர் குழைந்து.

சாதியிலார் பேதமிலார் சாத்திரங்கள் ஏதுமிலார்
வாதவலைக் கெட்டா வளர்கலைஞர் - நீதிநெறி
ஓங்கிவளர் மட்டுவிலூர் ஒன்றியுளார்
அன்பர்களைத்
தாங்கியருள் செய்துதினந் தான்.

எங்கே இறையென்பார் எங்கே யருளென்பார்
எங்கேயெங் கேயென்பார் எல்லோரும் - தங்கி
மிகத்தெரிய மட்டுவிலூர் வீற்றிருப்பார்
மேன்மையினைப்
பகுத்தறிவால் காணாப் பதர்.

பாலோ பழச்சுவையோ பாகோ பசுந்தமிழோ
சீலம் செறிமட் டுவில்சேர்ந்த - மேலாய
தாதை திறனுக்குத் தண்ணார் அருளுக்கிங்(கு)
ஏதோ வுரைப்ப தெதிர்.

தென்னை பனைமாட்டுப் பண்ணை வளந்தேங்கும்
தென்மர் பதிமட் டுவில்சேர்ந்த - மன்னே
தமிழோங்க வேண்டும் தமிழீழம் வேண்டும்
சுமைநீங்க வேண்டும் சுகம்.



கவிஞர் வி. கந்தவனம்

## வெற்றிகரமாக நடந்தேறிய பட்டதாரிகளுக்கான தொழில் தேடலும் குழுநிலை உதவியும் - 2007

**(Career Fair & Networking for Graduates of Sri Lankan Heritage - 2007)**



சென்ற 28-7-2007 சனிக்கிழமை ஸ்காபரோ சிவிக் மண்டபத்தில் காலை 10:00 மணி முதல் மாலை 4:00 மணிவரை கனடா இலங்கைப் பட்டதாரிகள் சங்கம் பட்டதாரிகளுக்கு மிகவும் பயன் தரக்கூடிய ‘பட்டதாரிகளுக்கான தொழில் தேடலும் குழுநிலை உதவியும்’ என்ற நிகழ்ச்சியொன்றை வெற்றிகரமாக நடத்தியது. கனடாவிலுள்ள இலங்கைத் தமிழ்ப் பட்டதாரிகள் தங்கள் கல்வித் தகைமைக்கும் வேலை அனுபவத்திற்கும் ஏற்ற வேலை ஒன்றைப் பெறுவதற்கு உதவும் நோக்குடன் இச் சங்கம் இந் நிகழ்ச்சியை ஒழுங்கு பண்ணியிருந்தது. அன்றைய தினம் வேறு பல நிகழ்ச்சிகள் இருந்த போதிலும் நூற்றுக்கு மேற்பட்ட பட்டதாரிகள் இதிற் கலந்து பயன் பெற்றனர்.

சங்கத்தின் தலைவர் கலாநிதி க. தெய்வேந்திரராஜா தனது தலைமையுரை யில் தமிழ்ச் சமூகத்தின் கல்வித் துறையையும் மேற்படிப்புடன் கூடிய தொழில் துறையை மேம்படுத்தும் நோக்குடன் சங்கம் செயற்படுத்தும் திட்டங்களில் ஒன்றாகவே இந் நிகழ்ச்சியை ஒழுங்கு பண்ணி இருப்பதாகக் கூறினார். அவரைத் தொடர்ந்து சிறப்பு அரசாங்க விருந்தினராக வந்திருந்த ஒன்ரேறியோ நியாய நிறைவேற்று அதிகாரி ஜீன் அகஸ்டின் உரையாற்றும் போது பட்டதாரிகள் சங்கம் செய்யும் சிறந்த சேவையைப் பாராட்டுவதாகவும், தமிழ்ச் சமூகத்தின் பட்டதாரிகளுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்வாது என்றும், தனது திணைக்களத்தின் செயற் திட்டங்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

இதனைத் தொடர்ந்து சங்க உபதலைவர் திரு. சுரேன் பாலேந்திரன் யாவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ‘நம்பகமான தொழில்சார் தொடர் வழிகாட்டல்’ (Career Mentorship Program)



என்னும் அருமையான திட்டத்தை அறிமுகம் செய்து அதன் செயல்முறையைப் பற்றி விரிவாக விளங்கப் படுத்தினார். இத்திட்டம் பற்றிய துண்டுப்பிரசுரம் ஒன்றையும் வந்திருந்தோர்களுக்கு சங்கம் வழங்கியது. இத் திட்டத்தின் மூலம் எப்படிப் பட்டதாரிகள் கனேடிய தொழிற்சந்தையில் தத்தம் துறையில் வேலைபெறும் சந்தர்ப்பங்களை அதி-கரிக்கலாம் என்பது அப்பிரசுரத்தில் தெளிவான விளக்கம் கொடுக்கப் பட்டிருந்தது.

பின்னர் பட்டதாரிகள் தத்தம் துறையில் வேலைபெறுவதற்கென விசேடமாக உருவாக்கப்பட்டுள்ள பயிற்சிநெறிகளை வழங்கும் “ACCES”, “SKILLS FOR CHANGE” போன்ற நிறுவனங்களின் அதிகாரிக-ளாகிய மனோ விஸ்வாவும் கோலி பெஸ்ற்ம் சிற்றுரையாற்றினர்.

பட்டதாரிகளுக்கு ஏற்ற வேலைகள் என்னென்ன உண்டு என்பதையும் வேலை கொடுப்பவர்கள் என்னென்ன விடயங் களைக் கவனத்தில் கொள்கிறார்கள் என்பதை மிகவும் திறைமையாக யோர்க் மாவட்டக் கல்விச்சபையிலிருந்து திருமதி சுகன்யா சின்னத்தம்பியும், ஸ்கோஸியா வங்கியிலிருந்து திரு. எஸ். கண்ணன் அவர்களும், கொனிவெலில் இருந்து எல். சசீதரன் அவர்களும், கொம்பியூரெக் கல்லூரியிலிருந்து கலாநிதி த. வசந்தகுமார் அவர்களும், பட்டதாரிகள் சங்கத்திலிருந்து திரு. எஸ். குணசேகரனும் சிற்றுரைகள் நிகழ்த்தினார்கள்.

கூட்டத்தில் இறுதியாக சங்கத்தின் காரி யதரிசி திரு சி. இராமநாதன் அவர்கள் தனது நன்றியுரையின் போது பட்டதாரிகள் தத்தம் துறையில் வேலை பெறுவது சம்பந்தமாகவோ, துறையில் வேலை பார்ப்பவர்களுக்கு அனுமதி




வழங்கும் ஸ்தாபனத்திற்கு விண்ணப்பித்து அனுமதி பெறுவதற்கும், துறைகளில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றமான முறைகள் பற்றி அறி-வதற்கும் பட்டதாரிகள் சங்கம் உதவ என்றென்றும் தயாராக இருக்கின்றது என்பதை மீண்டும் உறுதிப் படுத்தினார். மேலும் அன்றைய நிகழ்ச்சியை ஒழுங்கு பண்ணுவதற்கும் நடத்துவதற்கும் உதவி செய்தவர்களுக்கு நன்றி தெரிவித்தார். இதன்போது அவர் வானொலி தொலைக்காட்சிச் சேவைகளைக் கொடுத்த சீ எம் ஆர், ரீ வீ ஐ நிறுவனத்தினர் இந்த நிகழ்ச்சியின் பிர-தான அனுசரணையாளர்கள் என்பதைக் கூறி அவர்களது சேவைக்கு சங்கத்தின் இதயங் கனிந்த நன்றிகளைத் தெரிவ-ித்தார்.

அடுத்ததாக யாவருக்கும் இலவச உணவு வழங்கப்பட்டது. பின்னர் பட்டதாரிகளுக்குப் பயிற்சிநெறிகளையள-ிக்கும் நிறுவனங்களும் வேலைகளை வழங்கக்கூடிய நிறுவனங்களும் தத்தமக்கு ஒதுக்கப் பட்ட பொருட்காட்சி மேசைகளிலிருந்து கொண்டு நிகழ்ச்சிக்கு வந்தோருக்கு விளக்கங்களை அளித்தனர். இதில் கலந்து கொண்டவர்கள்: கோனிவெல் நிறுவனம், கணக்காளர் சங்கம், எடவேட் ஜோன்ஸ் நிறுவனம், ஸ்கோஹீயா வங்கி, கன்ரம் குறுாப் நிறுவனம், அகசெஸ் நிறுவனம், யோர்க் பிரதேச மாவட்டப் பாடசாலைச் சபை, ஸ்கில்ஸ் போர் சேஞ் நிறுவனம், கொம்பியூரெக் கல்லூரி ஆகியவையாகும். வந்திருந்த பட்டதாரிகள் தாங்கள் எதிர்பார்த்ததை விட மிகவும் பிரயோசனமான நிகழ்ச்சியாக இருந்தது என்று மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினர். இப்படியான தொரு பெறுமதி வாய்ந்த நிகழ்ச்சியை இலவசமாய வழங்கிய இலங்கைப் பட்டதாரிகள் சங்கத்திற்கு தமிழ்ச் சமூகம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றது.



# கர்வம் ஒருவனுக்கு கட்டாயம் தேவை

'நான்' என்ற சொல்லில் செருக்கும், தலைக்கனமும் தொனிக்கவே செய்கின்றது. இதனை அகந்தை, ஆணவம், கர்வம், கொழுப்பு என்று பலபடப் பேசலாம். நான் என்ற தன்மைதான் ஒருவனை வாழவைக்கின்றது எனலாம். இது ஒருவனை தனிமைப்படுத்தி தனித்துவமாக்கின்றது என்றும் சொல்லலாம். இது அளவிற்கு மீறும் போது ஆபத்தான-தாகவும் ஆகிவிடுகின்றது. சூரன் தன் அகந்தையால் அழிந்ததை கந்தபுராணம் கூறுகின்றது. இந்த மண்டைக் கொழுப்பு மனிதனுக்கு இருக்குமாயின் அதனை மற்றொரு மனிதன் வாய்வலிக்க விமர்சிக்கின்றான்.

கர்வம் யாருக்கு வரும்? காரியங்கள் ஆற்றுகிறவர்களுக்கே கர்வம் வரும். அதுவும் சிறப்பான காரியங்கள் ஆற்றுகிறவர்களுக்கே தலைக்கனம் வரும். கர்வப்படும் படியான காரியம் எதையும் இந்த உலகில் எவன் ஆற்றவில்லையோ, அவன் தன்னைச் சுமந்த கருப்பையை கௌரவப்படுத்தாத ஜடம். அவன் ஜனனம் அநாவசியமான ஒன்று. எனவே அரசன் முதல் ஆண்டிவரை நான் என்பது ஆட்டிப்படைக்கின்றது.

தன் உச்சந்தலையில் பனித்துளி வந்து உட்காருகின்றது என்பது காட்டுப்புல்லுக்கு கர்வத்தை ஏற்படுத்துகின்றது. இந்த கர்வம் அதனை கவிழ்த்து விடுவதில்லை. எந்த புயற் காற்றும் அந்தப் புல்லைச் சாய்த்து விடுவதில்லை. நான் என்றும் நினைப்புத் தான் கர்வத்தின் தாய். எனவே தான் நான் என்னும் நினைப்பும் முனைப்பும் இல்லாமல் எந்த மனிதனாலும் நான்கு விரற் கட்டை அளவு கூட முன்னேற முடியாது. நான் வலிமை மிக்கவன் என்னால் இதனை நிகழ்த்திட முடியும் என்று நினைத்தாலேயன்றி என் உள்ளத்தில் ஒரு உந்துசக்தி எங்கிருந்து வரக்கூடும்? குண்டலினி சக்தியை நெற்றிப் பொட்டுக்குக் கொண்டுவந்து புருவ மத்தியில் நிறுத்துவேன் என்னும் வைராக்கியத்தோடு அட்டணக்கால் போட்டி அமர்ந்த அழுகுணிச் சித்தருக்கு, அட்டமாசித்தி கைவரப்பெற்றதன் காரணம் நான் இதனை அடைந்தே தீருவேன் என்றிருந்த நினைப்பும் முனைப்புமே தான். இந்த நினைப்பையும் முனைப்பையும் கர்வம் என்று கொச்சைப்படுத்தி விட்டால் நாம் வீக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் வித்தியாசம் தெரியாதர்கள் ஆவோம்.



**நா.க.சிவராமலிங்கம்**

இறைவனைப் பாடவந்த மணிவாசகப்பெருமான் 'என்னுள் இருந்த என்னை எனக்கு இனங்காட்டி' என்று தான் பாடினாரே அல்லாது என்னுள் இருந்த உன்னை எனக்கு இனங்காட்டி என்று பாடவில்லை ஏன்? பனுவலும் பதிகமும் பாடி பரம்பொருளை பரவி வீடுபேறு எய்தும் ஆற்றல் உனக்குள்ளேயே இருக்கிறது என்பதைக் காட்டத்தான் இறைவன் என்னுள் இருந்த என்னை எனக்கு இனங்காட்டினான் என்பது மணிவாசகர் கண்டறிந்த மகத்தான உண்மை. நான் எனும் பிரக்ஞ்சை நசிந்து போயிருந்தால் அவரால் திருவாசகம் என்ன ஒருவாசகமும் பாடியிருக்க முடியாது.

தன்னையறிதல் எவனுக்கில்லையோ அவன் தோள்களில் தாழ்வு மனப்பான்மை குடிகொண்டு விடுகின்றது. அதனால் தான் 'தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்லாயோ வெண்ணிலாவே' என்று வள்ளலார் பாடியவைத்து போனார் போலும். என்னை அறிய நான் முயலும் போதுதான் எனக்குள் நானே ஊதிக் கனல் வளர்க்கக்கூடிய சிறிய நெருப்புப் பொறி கண்சிமிட்டுவதை கண்டு கொள்ள ஏதுவாகின்றது. தமிழுக்கு வந்த வசை தன்னால் தீர்ந்தது என்று பாரதியை தருக்கோடு பாட வைத்ததும் இந்த அக்கினிக் குஞ்சு தான்.

நம்மால் முடியுமா என்று நகத்தைக் கடிப்பவர்களுக்கு முயற்சி மெய்வருந்தக் கூலிதரும் என்பது ஒரு உந்து சக்தியாக அமைந்து விடுகின்றது.
முதலில் நீ வினைகளை அகற்று, அதற்குரிய விலையை அப்புறம் நான் நிர்ணயம் செய்கிறேன் என்று தான் கீதை மூலமாக கண்ணன் சொல்கிறார். தன்னுடைய ஆற்றலை மனிதன் அறிந்து கொள்ள வேண்டும் என்கின்ற அளப்பரும் கருணையினால்தான் ஆண்டவன் அப்படிச் சொன்னான் என்பதாகும். எத்தனை சிறியதாக இருந்தாலும் என் ஆற்றலை நான் அறிய தலைப்படும் பொழுது கர்வம் தலையெடுக்கிறது.

களிமண்ணை குழைத்து மண்பாண்டம் செய்யும் குயவன் தன் கைத்திறன் பற்றி கர்வம் கொள்ளவில்லையெனின் மறுபடியும் அவன் மண்ணைப் பிசைந்து பாண்டம் செய்தால் பக்குவமாக வராது. எனவே தன்னைப்பற்றிய தலைக்கனம் ஒவ்வொரு மனிதனுக்கும் இருந்தால் தான் அவன் தலையெடுக்கமுடியும். வடமொழி இதனை 'வித்யாகர்வம்' என்று விளக்குகின்றது. கர்வம் பிறரை காயப்படுத்தாத அளவிற்கு இருக்குமேயானால் அதனால் சிறப்பான வெற்றி கிட்டும்.

என்னால் முடியும் என்ற வலுவோடு கப்பல்களுக்கு மத்தியில் கட்டுமரத்தில் சென்றாலும் வெற்றி நிச்சயம். இந்தக் கர்வம்தான் தன்னம்பிக்கை எனலாம். இந்த தன்னம்பிக்கை மூலம் திறமையை வளர்த்து அதை நல்நெறிபடுத்திவிட்டால் தனிமனிதனும், சமூகமும், நாடும் பயனடையும்.

நான் போனால் நான் நம்பனை அறியமுடியும், அடையமுடியும் என்பது ஆன்மீகவாதிகளின் கருத்து. நம்மில் அனேகர் இந்த நானை விட முடியாததினால் தான் இறைவனை அணுக முடியாதவர் போலும். இந்த நானை விடுதல் என்பது சரணகதித் தத்துவமாகும். அகங்காரத்தை சங்காரம் செய்தவர்கள் ஒருசிலரே. அவர்களே அருளாளர்கள். இதனை நான் கெட்டவா என்றார் மணிவாசகர். நான் ஒழியும் போது ஆன்மா துன்பமகன்று அன்புற்று இன்புற்று தென்புற்று இறைவனுடனே இணைந்து விடுகின்றது.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.


## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

**Kanthan: 416.291.3997**







• No Spraying • No Smelling • No Moving



## APARTMENTS FOR RENT

**TWO MONTHS FREE RENT**



*In a NEWLY Renovated High-Rise Apartment Building*
*Clean, Utilities inclu. Free parking.*
*Close to TTC, Tamil store in building, schools nearby*

**Pl. Call: 416.264.2818**



## தமிழர் நிர்வாகத்தில் ஒரு

# EMBASSY

- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள்
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)



**416-332-8451**

Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough


- நத்தைகள் எங்கும் நகராமல் ஒரே இடத்தில் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் வரை தூங்கும் தன்மையுள்ளவை.
- உலக சாதனைகள் அடங்கியுள்ள கின்னஸ் புத்தகம் தனக்குத்தானே ஒரு கின்னஸ் சாதனை படைத்துள்ளது. பிரிட்டிஷ் பொது நூலகங்களில் அதிகமாகத் திருட்டுப்போவது கின்னஸ் புத்தகம் தானாம்.
- தலாய்லாமா என்பதற்கு அர்த்தம் என்ன? ஞானக்கடல்


Niru
நிரு
பிராண்ட்
BRAND
Niru
®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
MARKETING BY TAMIL SOURCE

# நோய் தீர்க்கும் பழங்கள்

**கொடிமுந்திரிப்பழம் (Grapes Fruits)** - இதன் மகத்துவம் தேவாலயங்களில் ‘கொமினியன்’ பொழுது வையினுக்குப்பதிலாக கொடுக்கும் காரணத்தால் பிரபல்யமானது. இந்தப் பழத்தால் செய்யப்படும் வையின் அதிகமாக பிரான்ஸ்சில் விரும்பிப் பருகப்படும். ஆராட்சியாளர்கள் இந்த வைன் அருந்தும் பிரான்ஸ் வாசியர்கள் ஏனையோரைப் போல் கொழுப்புச்சத்தும், புகை பிடிப்பவராக இருந்தும் ஏனையோரைவிட மிகக்குறைவாகவே இருதய நோயால் பாதிக்கபடுகிறார்கள் என்று கண்டறிந்துள்ளனர். இதன் காரணம் இவர்கள் அதிகம் அருந்தும் இந்த முந்திரி ரசத்தால் செய்யும் சிவப்பு வையினில் ‘ப்ளவொனொயிட்ஸ்’ (Flavonoids) என்னும் ஊக்குச்சத்து அதிகம் இருக்கிறது. இந்த ஊக்குச்சத்து இரத்தத்தில் உள்ள கெட்ட ‘கொலெஸ்ரெறோள்’ (LDL bad Cholesterol) இரத்ததிலுள்ள பிராணவாயு தரங்கெட்டு இரத்த நாடிகளில் படிவதைத்தடுத்து அவை அங்கு உறைந்து கட்டிபடுவதை தடுக்க வல்லது. இந்த பழத்தில் அதிக பொராசியம் (Potassium) உண்டு. இது இரத்த அமுக்கத்தையும் பாரிச வாதத்தையும் தடுக்கும் சக்திவாய்ந்தது. இந்தப்பழத்தில் உள்ள நாவல் நிறத்திலேயே ‘ப்ளனோவெயிட்’ இருக்கிறது. அதனாலேயே சிவப்பு வையின் குடிப்பது நல்ல பயன் தரும் எனப்படும். இந்த சிவப்புப்பழத்தைப்பிழிந்து குடிப்பதோ அல்லது தின்பதோ சிறந்தது. கடைகளில் வேண்டும் பழ ரசங்களில் அதிக சத்துக்கிடையாது. அவை முந்திரி வாசனையுடன் சீனி சேர்க்கப்பட்ட நீர் என்பதை உணர்ந்துகொள்தல் அவசியம். இந்தப்பழத்திலும் மூன்று மடங்கு ‘ப்ளனோவெயிட்’ சிவப்பு வைனில் உள்ளதென்று ஆராட்சியாளர் கண்டுள்ளனர்.



**வாழைப்பழம் (Banana)** - இந்தப்பழத்தில் அதிக ‘பொராசியம்’ (Potassium) என்னும் தாதுப்பொருள் உள்ளது. இது இரத்த அழுத்தத்தைக்குறைத்து இருதயநோயை தடுக்கவும் குணமாக்கவும் வல்லது. இந்த வாழைப்பழங்கள் வயிற்றில் ஏற்படும் ‘அல்சர்’ என்னும் புண் உணவிற்குபின் உண்பதால் விரைவில் குணமடையும். மேலும் வயிற்றோட்டத்தால் வரும் தாது நலிவை இந்த வாழைப்பழம் விரைவில் நீக்குவதுடன் இதிலுள்ள ‘பெக்ரின்’ (Pectin) என்னும் ஊக்கச்சத்து, மலத்தின் நீர்தன்மையை உறிஞ்சும் சக்திவாய்ந்ததால் வயிற்றோட்டத்தை குறைக்க வல்லது.

**‘கிறேப் புறுற்’ (Grape Fruit)** - இந்த நாரத்தம்பழத்தில் முக்கிய ஊக்குசக்திகளான ‘லைகொபீன்’ (Lycopene) ‘லிமொநெ-ாயிட்’ (Limonoids) ‘நறின்ஜின்’ (Naringin) ‘பெக்ரின்’ (Pectin) ஆவனவும் அதிகமாக உள்ள ஜீவசத்து ‘சீ’ (Vitamin C) ஆவனவும் உண்டு. இருதயநோய், புற்றுநோய் முதலியவற்றையும், அடிக்கொருதரம் ஏற்படும் தடிமன் பீனிசம் ஆகிய நோய்களையும் தீர்க்கவல்லது. இந்த நாரத்தம்பழத்திலுள்ள ‘லெமொனொயிட்’ உடம்பிலுள்ள புற்றுநோயை உருவாக்கும் கலன்களை (Cancerous Cells) தடுத்து கழிவாக அகற்றிவிடும் தன்மையுள்ளது. இதில் உள்ள ‘நாறிஞ்ஜின்’ என்னும் ஒரு ஊக்குச்சத்து மார்பக புற்றுநோய் கலன்கள் பெருகுவதைத் தடுக்கவல்லது என்று பல ஆய்வுகூட ஆராட்சிகள் நிரூபித்துள்ளன. இதிலுள்ள ஜீவசத்து ‘சீ’ ஒரு நாளைக்கு தேவைப்படும் அளவுக்கு மேல் உள்ளது. இந்த ஜீவசத்து பீனிசம், காயங்களை விரைவில் மாற்றும் ஆற்றலும், உடம்பின் நோய் எதிர்பு சக்தியை கூட்டும் தன்மையும் வாய்ந்தவை. இதிலுள்ள ‘பெக்ரின்’ என்னும் சத்து கெட்ட கொலெஸ்ரெறோள்’ குறைக்க வல்லது. இந்த பெக்ரின் பழத்திற்கும் தோலுக்கும் இடையிலுள்ள வெண்மையான பஞ்சு போன்ற இடைத்தோலிலேயே காணப்படுகிறது. தோடம்பழம், தேசிக்காய் இவற்றில் காணப்படும் இந்த பஞ்சுபோன்ற பாகத்திலும் பெக்ரின் உண்டு. இந்த நாரத்தம் பழம் சில சிவப்பாக இருக்கும் அவைகளிலேயே அதிக சத்து உண்டு.

**கன்ரலோப் (Cantalope)** - இந்த பழம் உருண்டையாக சற்று தவிட்டு நிறமாக இருக்கும். இதில் அதிகமான ஜீவசத்து ‘சீ’ (Vitamin C ) ‘பீரா-கறொரின் (Beta-Carotene) ஆகிய சத்துகள் இருக்கின்றன. இவை இரத்த அழுத்தம், உடம்பில் ‘கெட்ட கொலெஸ்ரெறோள்’ (Bad Cholesterol.LDL) புற்றுநோய் (Cancer) ஆகிய நோய்களைத்தடுக்கவும் குணப்படுத்தவும் வல்லது. இதில் அதிக பொராசியம் (Potassium) என்னும் தாதுப்பொருள் உள்ளது. இது இரத்த அழுத்தம், இருதய நோய் இவற்றை குணமாக்க வல்லது. இந்த பொராசியம் எமது உடம்பில் அதிகமாக உள்ள உப்புச்சத்தை (Sodium) அகற்றும் சக்திவாய்ந்தது. மனித உடம்பில் அதிகமான உப்புச்சத்தே இரத்த அழுத்தம் கூடுவதற்கு காரணி என்பது ஆராட்சி மூலம் கண்டறிந்த உண்மை. இந்த பொராசியம் உடம்பில் கெட்ட கொலெஸ்ரெறோள் தேங்கச்செய்யும் ‘லோ டென்சிரி லிப்போப்புரதம்’ (LDL) கூடுவதைத் தடுத்து நல்ல ‘ஏச்.டீ.எல்’ (HDL) அதிகரிக்கச்செய்து இரத்த அழுத்தத்தை தடுக்கும் தன்மையுள்ளது. இந்த ‘கன்ரலோப்பை’ தாராளமாக உணவுக்குப்பின் சாப்பிட்டால் பல நற்பலன்கள் உண்டு.



**எலுமிச்சம் பழம் அல்லது தேசிப்பழம் (Lemons or Limes)** - இந்த பழம் அதிக ஜீவசத்து ‘சீ’ உள்ள பழம். இதைத்தவிர ஒவ்வாமையையும் இது தடுக்க வல்லது. இந்த ஜீவசத்து ‘சீ’ உடம்பில் தீங்கு விழைவிக்கும் தரம்கெட்ட பிராணவாயு துகழ்கள் ஆரோக்கிய கலன்களைத் தாக்காது காப்பாற்றும் தன்மை வாய்ந்தது. இந்த பழத்தின் திரவத்தில் ‘லிமொனின்’ (Lemonin) என்னும் ஊக்குச்சத்து இருக்கிறது. இது உடம்பிலுள்ள நச்சு துணுக்குகள் கலன்களைத்தாக்கி புற்றுநோய் கலன்களை உருவாக்காது தடுக்கவல்லது. இது கல்லீரலை ஊக்குவித்து அங்கு தேங்கும் புற்றுநோய் துகழ்களை அகற்ற உதவும் சக்திவாய்ந்தது. இந்த தேசிப்பழத்தின் தோலில் அதிக ‘லிமொனின்’ (Limonin) இருக்கிறது. இது நன்கு காய்ந்தபின்பும் அதன் சத்தை இழக்காது என்று ஆராட்சியாளர்கள் கூறுகின்றனர். இதன் காரணத்தாலன்றோ சித்த மருத்துவத்தில் பாண்டித்தியம் பெற்ற நம் மூதாதையர்களாகிய சித்தர்கள் ஊறுகாய் போட்டுவைத்து பலநாட்கள் பாவித்து சுக தேகிகளாக வாழ்ந்தனர்.






டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D
Holistic Practitioner (Canada)
Nutrition & Fitness (Canada)
‘யோக சித்தர்’ வவுனியா, இலங்கை -
Tel. - 416.291.3022 /E.Mail - DRVPS@Hotmail.com





KV TRUCK DRIVING CENTER

6 கிழமைகளில் நீங்களும் கனரக வாகன சாரதி ஆகலாம்

ACDZ வாகன சாரதி அனுமதி பத்திரங்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படும்.
ஒவ்வொருவருக்கும் தனித்தனியான பயிற்சிகள் வழங்கப்படும்.
உங்கள் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படும்.
பயிற்சியின் முடிவில் உடனடி வேலைவாய்ப்புக்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.

பயிற்சி முழுவதற்குமான கட்டணம் $1699.00 மட்டுமே

CANADA & USA
பெருந்தெருக்களில் பயிற்சி வழங்கப்படும்

* 365 LEARNING PERMIT, * LOG BOOKS,
* AIR BREAK (Z) * DANGEROUS GOODS,
* BORDER CROSSING

WELFARE & UNEMPLOYMENT
இல் இருப்பவர்களுக்கு இலவச பயிற்சி வழங்கப்படும்.

உங்கள் வசதிக்கேற்ப வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சி வழங்கப்படும்.

அழையுங்கள்: கிருபா
647-274-0300 / 647-428-6988
Fax: 647-428-6989
visit: www.kvtrucking.com
805 MIDDLEFIELD ROAD , UNIT - 202, SCARBOROUGH, ONTARIO.
(Middlefield & McNicoll)



mhc

MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4


OPENING VERY SOON
OVER 85% SOLD
1st South Asian Indoor Mall in GTA
Only few units available for lease or sale
GTA SQUARE
For further information please call:
416.321.6969
www.gta square.ca

# திருச்சி-தமிழகத்தின் குட்டித்தலைநகரம்



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்-22

பனி மேல் தெளிந்த நீரும், வெட்டவெளியான நிலமும், மலையும், அழகிய நிழலும் உடைய கோட்டைக் கொத்தளங்கள் கொண்ட ஊர் திருச்சிராப்பள்ளி. உலகின் பழமையான பாறைகளில் ஒன்றாக இன்றும் கருதப்படும் மலை இங்குள்ள மலை. திருக்கயிலையில் வீற்றிருக்கும் சிவபெருமானைத் தரிசிக்க வந்தபோது, ஆதிசேஷனுக்கும் வாயுவுக்கும் ஏற்பட்ட போட்டியில், கயிலையைத் தன் உடலால் ஆதிசேஷன் பிடிக்க, வாயுவின் காற்றில் உலகம் அதிர, கயிலை மலையிலிருந்து சிதறி விழுந்த மூன்று துண்டுகளில் இந்த மலையும் ஒன்று என்பது ஐதீகம். மற்றவை திருக்காளத்தி, திருக்கோணமலை என்கிறது புராணம். இந்த மலையைப் போலவே மிகப் பழமையான நகரம் திருச்சிராப்பள்ளி.

“திரிசிரமலை”, “திரிசிபுரம்”, “முத்தலை மலை”, “பிரமகிரி” என்றெல்லாம் பழங்காலத்தில் பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி. இப்போது சுருக்கமாக திருச்சி என்று சொல்கிறார்கள். உறையூர் சோழநாட்டின் தலநகராக சிறப்புற்று விளங்கிய போது, திருச்சியும் ஒரு பெருமை வாய்ந்த பட்டணமாகவே வளர்ந்து வந்திருக்கிறது. அப்போதே, பிரபலமான திருச்சி மலைக் கோட்டைச் சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. கி.பி. 16ம் நூற்றாண்டில் விஸ்வநாத நாயக்கர் காலத்தில் பெரிய மதில்கள் எழுப்பிக் கோட்டையை அமைத்திருக்கின்றனர். கி.பி. 1660லும், 1675லும் இக்கோட்டையை பீஜப்பூர் சுல்தான் தாக்கினார். ஆனால், இதனைக் கவர இயலவில்லை. 1743 இல் ஹைதராபாத் நஜாம் திருச்சி மீது படையெடுத்து வந்தபோது மராட்டியர்கள் திருச்சியை இழந்தார்கள். திருச்சி 1807இல் ஆங்கிலேயர் கைப்பற்றும் வரை ஆற்காடு நவாப்பிடமே இருந்தது. இக்கோட்டை பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேயர்களிடையே நடைபெற்ற கர்நாடகப் போரினால் பாதிக்கப்பட்டது. அக்காலங்களில் பல்வேறு போர்களில், திருச்சிக்கோட்டை ஒரு பிராந்திய படைத்தளமாகவே பயன்படுத்தப்



பட்டு வந்திருக்கிறது. ஆங்கில ஆதிக்கம் வேரூன்ற இராபர்ட் கிளவ் திருச்சி நகரில் தான் தம் திட்டங்கள் நிறைவேறக் கண்டார். கர்நாடக யுத்தங்களில் பெற்ற வெற்றியே ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு அஸ்திவாரம் என்றால் திருச்சியே அதன் கருவாக இருந்தது.

திருச்சி மலைக் கோட்டையைப் போலவே, மலை உச்சியில் இருக்கும் கோவில் பிரசித்திபெற்றது. 273 அடி உயரமும் 417 படிகளும் கொண்டது. இங்கு எழுந்தருளியிருக்கும் ஆண் கடவுள் தாயுமானவர் பெண் கடவுள் மட்டுவார் குழலம்மை. மலை உச்சியில், உச்சிப் பிள்ளையாரும் அடிவாரத்தில் மாணிக்க விநாயகரும் பிரசித்தி பெற்று விளங்குகின்றனர். “தென் கயிலாயம்” எனப்பெறும் இத்தலத்தில், கீழிருந்து சுவாமி சன்னதி வர மேல்தளம் மூடப்பட்ட காங்கிரீட் படிக்கட்டு அமைக்கப்பட்டுள்ளது. ராமனிடம் விடைபெற்று, விபீஷணன் (இராவணனின் தம்பி) கொண்டு வந்த அரங்கனின் சிலையைப் பிராமணச் சிறுவனாக நின்று பெற்றுத் திருவரங்கத்தில் வைத்து விட்டு இங்கே வந்து அமர்ந்தவர்தான் உச்சியிலுள்ள பிள்ளையார் என்பது புராணம். மலை அடிவாரத்தில் மாணிக்கம் என்ற தொண்டரால் இடைவிடாமல் தொழப்பெற்றதால் மாணிக்க விநாயகராகக் காட்சியளிக்கிறார். தேவாரம் பாடிய மூவராலும் அருணகிரியார், தாயுமானவர் ஆகியோராலும் பாடப்பெற்றது இத்தலம். கோவிலின் வரலாறு 6ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது. பல்லவ மன்னவர்களால் கட்டப்பட்டு, பின் நாயக்கர் காலம் வரையிலும் பல மன்னர்கள் அவ்வப்போது கோவில் கட்டுமானங்களை



வழிப்போக்கன்

எழுப்பி, பல்வேறு திருப்பணிகளைச் செய்து வந்துள்ளனர். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடைய இத்தலத்தில் ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் 23, 24, 25 ஆகிய தேதிகளில் மூலவர் மீது மாலைச் சூரியனின் ஒளிக்கதிர்கள் விழுகின்றன. சோமவாரம் ரோகிணி நட்சத்திரம் கூடிய நன்னாளிலும், பங்குனி மாதத்திலும் பிரமதீர்த்தத்தில் மூழ்கி வழிபடுவோர்க்கும், பூரநட்சத்திரம், நவமி திதி கூடிய சுபநாளில் மலையை வலம் வருவோருக்கும் சகல பேறுகளும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. குழந்தைப் பேறு நல்லபடியாக நடக்க வேண்டும் என வேண்டி, குழந்தை பிறந்தபின் வாழைப்பழக் குலைகளைக் காணிக்கையாகத் தாயுமானவருக்குச் செலுத்துவது வழக்கமாக இருக்கிறது.

திருச்சியில் முக்கியமான மற்றொரு இடம் நாயக்கர் கால அரண்மனை. திருச்சியை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த மதுரை நாயக்க வம்சாவழியினரின் அரசி மங்கம்மாள் (1689-1706), அரியணையிலிருந்து ஆட்சி செய்த அரண்மனைக் கட்டிடம் திருச்சி நகரின் மத்தியில் (தெப்பக் குளத்திற்கு அருகில்) உள்ளது. அழகிய உயரம் குறைந்த தூண்கள், வளைவுகள் குவிமாடங்கள் ஆகியவை இக்கட்டிடத்தில் சிறப்பான அம்சங்களாகும். இக்கட்டிடத்தில் நகர்மன்றம் அமைந்துள்ளது. இக்கட்டடத்தை அடுத்து நாயக்கர் கால அரண்மனைப் பகுதி கட்டிடங்கள் உள்ளன. தற்போது இவற்றில் அரசு அலுவலகங்கள் அமைந்துள்ளன.

“தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கம்” என்று சிறப்பித்துப் புகழைப் பெறும், திருவரங்கம், திருச்சிக்கு மிக அருகிலேயே உள்ளது. இதை ஸ்ரீரங்கம் என்றும் சொல்வார்கள். வைணவர்களுக்கு கோயில் என்றால் அது திருவரங்கத்தையே குறிக்கும். வைணவத் தலங்கள் 108. அவற்றுள், திருவரங்கமே மிக்க முதன்மையும் சிறப்பும் வாய்ந்ததாகும். பன்னிரு ஆழ்வார்களில் பதின்மரும் பாடிப் போற்றி சிறப்புறுவது திருவரங்கம். காவிரி - கொள்ளிடம் என்னும் இரு நதிகளுக்கு நடுவில் அமைந்துள்ளதாலேயே இந்தத் தலம் திருவரங்கம் எனப்பெயர் பெற்றுள்ளது என்கிறார்கள். “அரங்கநாதர் தாம் விபீடணனுக்கும், அவன் நாடாகிய இலங்கைக்கும் என்றும் அருள்புரிந்து வருவதற்குரிய அடையாளமாகவே “குடதிசை (மேற்கில்) முடியை வைத்து, குணதிசை (கிழக்கில்) பாதம் நீட்டி, வடதிசை (பின்பு) முதுகு காட்டி, தென்திசை இலங்கை நோக்கி” எழுந்தருளியிருக்கிறார் என்பது தல வரலாறு.

மிக்க பழமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட திருவரங்கம் கோயில் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிலப்பதிகாரம்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


SAFETY TRUCKS
Training School Ltd.
Training & Trucking Classes A, D & Z

In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course




19 Years Canadian Experience with Trucks

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (12 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
905-793-9546 / 416-616-5979
4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

# கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு காப்புறுதி நிவாரணம்

## வினா விடை தொடர் -2-

**1. கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய காப்புறுதி ஒப்பந்தத்தில் எத்தகைய வகையான ஒப்பந்தங்கள் பொதுவாக கனடாவில் உள்ள காப்புறுதி நிறுவனங்களினால் சந்தைப்படுத்தப்படுகின்றன? அவை ஒவ்வொன்றின் தன்மைகள் யாவை?**

(A) Level Premium Term to 75
(75 வயது வரை ஒரே விலையில் உள்ள ஒப்பந்தம்)

ஒப்பந்தத்தில் சேர்ந்த நாளில் இருந்து 75 வயது வரை ஒரே மாறாத விலையாக இருக்கும். இவ்வயதுடன் காலாவதியாகி விடும். இக்கொடிய நோய்களில் ஏதாவது ஒன்று இவ்வயதினுள் வரலாம் என எதிர்பார்ப்பதால் இதனை பலரும் பொதுவாக தெரிவு செய்வது உண்டு.

(B) Permant Level Premium Paid up 100
(100 வயதுவரை ஒரே விலையில் தொடர்ந்து பணம் செலுத்தி காலாவதியாகாது வைத்திருக்கும் ஒப்பந்தம்)

இவ் ஒப்பந்தத்தில் காலாவதியாதல் என்பது எதுவும் இல்லாது தொடர்ந்து நூறு வயது வரை பணம் செலுத்தி வைத்திருக்கும் ஒப்பந்தம் ஆகும்.

நீண்ட பல வருடங்கள், நோய் நொடி இல்லாது வாழ்ந்து வாழ்வின் இறுதி கட்டத்தில் கொடிய நோய்களுக்கு உள்ளாகலாம் என்வோ அல்லது என்றும் காலாவதியாகாத ஒப்பந்தம் வைத்திருக்க விரும்புவர்கள் இவ் ஒப்பந்தங்களில் சேர்ந்து கொள்வது வழமையாகும்.

(C) Level Premium Term to 75, Paid up 65
(65 வயதுவரை பணம் செலுத்தி 75 வயது வரை வலுவில் இருக்கும் ஒப்பந்தம்)

கனடாவில் உள்ளவர்களின் உழைக்கும் காலம் என குறிப்பிடப்படும் 65 வயது வரையான காலத்திற்கு மாதா மாதம் பணம் செலுத்த வேண்டும். ஆனால் 75 வயதுவரை மட்டும் ஒப்பந்தம் வலிமையுடையதாக இருக்கும். அதன் பின்னர் காலாவதியாகி விடும்.

(D) 10 Year Renewable & Convertible Term to 75 Convertible To 65

இந் நான்கு வகையான கொடிய நோய்களுக்கான காப்புறுதி திட்டத்தில் மிகவும் மலிவான திட்டம் இதுவாகும்.

இவ் ஒப்பந்தமும் 75 வயது வரையே வலிமையுடையதாகும். அவ்வயதின் பின்பு காலாவதியாகி விடும்.

ஆனால் 65 வயதுக்கு முன்பு விரும்பினால் எதுவித மருத்துவ புலனாய்வுகள் பரிசோதனை என இல்லாது நிரந்தர ஒப்பந்தமாக மாற்றியமைக்கலாம்.


சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான
ஆலோசனைகளுக்கு:
416.321.0999


ஒவ்வொரு பத்து வருடமும் மாத கட்டு பணம் அதிகரிக்கும்.

**இக்கொடிய நோய்களுக்கான காப்புறுதி ஒப்பந்தத்திற்கு மாதா மாதம் பணம் செலுத்தி கொண்டிருப்பவர் அதிஷ்டவசமாக இந் நோய்களில் ஏதாவது ஒன்று வந்து நட்டஈடு கோரும் நிலைமை உருவாகவில்லை என்றால் செலுத்திய பணத்தினை திரும்ப பெறலாமே! அதன் விவரம் என்ன?**

மேற்குறிப்பிட்ட நான்கு வகையான ஒப்பந்தத்தில் ஏதாவது ஒன்றில் சேர்ந்தவர் அல்லது சேர போகும் ஒருவர் தாம் மாதா மாதம் செலுத்திய பணத்தினை கொடிய நோயினால் நட்ட ஈடு கோரும் நிலைமை ஏற்படவில்லையானால் இதுவரை காலமும் செலுத்திய பணத்தினை ஒரு குறிப்பிட்ட காலத்தில் திரும்ப பெறலாம்.

இச் செலுத்திய பணத்தினை திரும்ப மீள் பெறுதல் என்பது பல வழிகளில் பெற்று கொள்ளலாம். அவையாவன பின்வருமாறு.

Premium Payback at Expiry Benefit (ஒப்பந்தம் காலாவதியாகும் வயதில் செலுத்திய பணத்தினை திரும்ப மீள் பெறுதல்)

அதாவது ஒப்பந்தத்தில் சேர்ந்தவர் 75 வயதினை அடையும் போது ஒப்பந்தம் காலாவதியாகி விடும். இவ்வயதிற்கு இடையில் கொடிய நோய்களில் ஏதாவது ஒன்றினால் பாதிக்கப்பட்டிருந்தால் நட்ட ஈட்டினை மொத்த தொகையாக பெற்று கொண்டிருக்கலாம். இவ்வாறு பெற்று கொள்ளாதவர் இவ் வயதினை அடையும் போது செலுத்திய முழு பணத்தினையும் (வட்டி இல்லாது) திரும்ப மீள் பெறலாம்.

Premium Payback at withdrawal Request (குறிப்பிட்ட சில வருடங்களில் செலுத்திய பணம் மீள தரவேண்டும் என்றும் நிபந்தனையில் உள்ள ஒப்பந்தம்)

தொடர்ச்சியாக பத்துவருடங்கள், அல்லது பதினைந்து வருடங்கள், அல்லது இருபது வருடங்களுக்கு பணம் செலுத்தி கொண்டிருப்பவர், கொடிய நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டு மொத்தமாக நட்டஈட்டினை பெற்றுக் கொள்ளவில்லையானால் இதுவரை காலமும் செலுத்திய மாத கட்டு பணத்தினை திரும்ப மீள் பகுதியாக அல்லது முழுமையாக பெற்று கொள்ளலாம். ஒப்பந்தமும் தொடர்ந்து வலிமையுடையதாக இருக்கும்.

ஆனால் இங்கு ஒரு முக்கியமான விடயம்! இக்கொடிய நோய்களுக்கான காப்புறுதி திட்டத்தில் செலுத்திய பணத்தினை நட்டஈடு எதுவும் கோரும் நிலைமை எதுவும் உருவாகாது செலுத்திய பணத்தினை திரும்ப மீள் பெறும் ஒப்பந்த பிரிவு ஒன்றினை சேர்க்க விரும்பினால் அதற்காக மேலும் சிறிது தொகை மாத கட்டுபணமாக அதிகமாக செலுத்த வேண்டும்.

இவ்வாறு சேர்க்கப்படும் மேலதிக பிரிவினை ஆங்கிலத்தில் "Premium Payback Rider" என குறிப்பிடுவர். செலுத்திய பணத்தினை திரும்ப பெறுவதற்கும் மேலதிகமாக செலுத்தும் இப்பணமும் சேர்ந்து திரும்ப பெறலாம்.

**இவ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொடிய நோய்களில் எதுவும் அல்லாது வேறு வழிகளில் திடீர் என உயிர் இழப்பு நடந்தால் நட்ட ஈடு கிடைக்குமா?**

எதுவிதமான நட்டஈடும் கிடைக்கமாட்டாது. ஆனால் இவ் ஒப்பந்தங்களில் குறிப்பிடப்படாது திடீர் என வேறு வழிகளில் உயிர் இழப்பு நடந்தால் செலுத்திய பணத்தினை மட்டும் குடும்பத்தவர்களுக்கு திருப்பி வழங்கும் பிரிவு ஒன்றினை மேலதிக பணம் கொடுத்து ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இருந்தால் மட்டும் குடும்பத்தவர்களுக்கு செலுத்திய பணம் மொத்தமாக வட்டி எதுவும் இல்லாது திருப்பி வழங்கப்படும்

இவ் ஒப்பந்த பிரிவினை ஆங்கிலத்தில் "Return of Premium at Death Rider" என குறிப்பிடப்படும்.

(கொடிய நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டவர் கூட வைத்தியர்களினால் நோய் பற்றி உறுதி செய்யப்பட்டு முப்பது நாட்களில் உயிர் இழப்பு நடந்தால் குடும்பத்தவர்களுக்கு செலுத்திய பணம் மட்டும் திருப்பி வழங்கப்படும். இங்கு "முப்பது நாட்களின் பின்பு நிவாரணம்" என்பது புரிந்து கொள்ள வேண்டிய ஒன்று.




INDEPENDENT ART FILM SOCIETY
சுயாதீன கலை திரைப்பட மையம்
ரொரன்ரோ - கனடா
iafs

**ஆறாவது தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா**
**ஒக்ரோபர் 06, 2007**

இவ் வருடம் 'ஒரு நிமிட' குறும் படங்களுக்கான சிறந்த பட விருதும் வழங்கப்படவுள்ளது. படங்கள் ஒரு நிமிடத்துக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். புலம் பெயர் படைப்பாளிகளிடமிருந்து (North America, Europe, Australia) வரும் படங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

- படைப்புக்கள் கிடைக்க வேண்டிய கடைசி நாள் புரட்டாதி 15 ம் நாள் (SEPTEMBER 15, 2007)
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்ப கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
- படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி

M. Ragunathan
Independent Art Film Society of Toronto
4 Castlemore Avenue, Markham, ON Canada L6C 2B3

மேலதிக தொடர்புகளுக்கு: 416-857-6406 / 416-450-6833 / rathan@rogers.com, www.iafstamil.com



EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"

Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com

- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of **ASHI** and **CAHPI**-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

# இதயத்தின் மறுபக்கம்

## ஓடும் நீர் உறைவதில்லை 42

நாம் வாழும் ஒவ்வொரு கணப்பொழுதும் ஏதோ ஒன்றின் வழிப்படுத்தல் மூலம் நகர்த்தப்படுகின்றது. இவ்வாறு எம்மை வழிப்படுத்தும் காரணிகளைப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நாம் இனம் கண்டு கொள்வதில்லை. இதற்கு அடிப்படையாக அமைவது அறியாமையா அல்லது ஆர்வமின்மையா என்பது ஆய்வுக்குரிய விடயமாகும். நமது நாளாந்த நடவடிக்கைகளில் பெரும்பாலான விடயங்கள் இயல்பாகவே அமைக்கப்பட்டிருப்பதான உணர்வும் வேறு சில பழக்கப் படுத்தப்பட்டவையாகவும் அமைந்திருப்ப தால் இந்த வழிப்படுத்தல் தொடர்பான உணர்வு நம்மிடம் மிகக்குறைவானதாகவே காணப்படுகின்றது.

வழிப்படுத்தல் எனும் போது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பிறரிடம் இருந்து கிடைப்பதாக எண்ணுகிறோம். வாழ்வியல் அனுபவங்களில் முன்னோடிகளாக உள்ளவர்களது அறிவுறுத்தல் கள், வாழ்க்கைப்பாதை சம்பந்தமான அவர்களது அனுபவங்கள், அதன்மூலம் அவர்களின் முன்மாதிரியான செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் என்பன எம்மை வழிப்படுத்துவதாக நாம் எண்ணுகின்றோம். இதனால்தான் வாழ்வியலில் ஓர் இலக்கை வைத்து அந்த இலக்கை அடைவதற்கு ஏற்கனவே வழிப்படுத்தல் அவசியம் எனக் கருதப்படுகின்றது. இருப்பினும் ஒரு மிக முக்கியமான விடயம் ஒன்றை நாம் உணரத்தவறிவிடுகிறோம்.

உண்மையில் முன்னோடிகள், அறிவாளர்கள், அனுபவசாலிகள் என்போரது வழிப்படுத்தல்கள் தான் மற்றவர்களை அதாவது எம்மைச் சிறந்தவொரு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு வழிவகுக்கின்றதா என்பதை ஆய்வு செய்துபார்ப்போமாயின் மிகவும் முக்கியமானதொரு விடயம் வெளிப்படுவதைக் காணலாம். முன்னோடிகள், அறிவாளர்கள், அனுபவசாலிகள் என்போரது வழிப்படுத்தல் களைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் ஒரே அளவான வளர்ச்சியைப் பெறுவதில்லை என்பதை நாம் அனுபவரீதியாக அறிந்திருக்கிறோம். அறிந்து கொள்கிறோம். உதாரணமாக ஒரு வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு ஒரேவகையான வழிப்படுத்தல், போதனைகள், புத்தகங்கள், பாடத்திட்டங்கள் என்பன வழங்கப்பட்டுள்ள போதிலும் அந்த வகுப்பில் உள்ள அத்தனை மாணவர்களும் சம அளவான திறமையையோ அல்லது சித்தியையோ பெறுவதில்லை. வாழ்வியல் மாணவர்களான எமக்கும் இதே நிலை என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியமானது. அதாவது இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனித ஜீவனுக்கும் சரிசமமான வாழ்வியல் வாய்ப்புகள் வழங்கப்பட்டிருப்பினும் ஏற்றத்தாழ்வுகள் இடம்பெறுவதற்கான காரணங்கள் எவை என்பதை அறிவது எதிர்காலத்தைச் சிறப்பாக அமைப்பதற்கு அத்திவாரமாக அமையும்.

முதலில் வாய்ப்புக்கள், வழிநடத்தல்கள் என்பன சமமாகக் கொடுக்கப்பட்டிருந்தும் வேறுபட்ட வாழ்வியல் நிலைகள் அதாவது ஒவ்வொருவரும் வேறுபட்ட அளவிலான நிலையைப் பெறுவதற்கு அடிப்படையாக அமைவது புறக்காரணிகளின் வழிப்படுத்தல் அல்ல. அகக்காரணிகளின் வழிப்படுத்தல் தான் என்பதை நாம் தெளிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். முன்னோடிகளின் வழிப்படுத்தல்கள் தகவல்களும் தரவுகளாகவும் அமைவதேயன்றி அந்தத் தகவல்களையும் தரவுகளையும் ஏற்றுக் கொள்வதும் நடைமுறைப்படுத்துவதும் அவரவது அகக்காரணிகளின் செயற்பாடுகளே.

உலகியலில் ஒவ்வொன்றுக்கும் எதிரானதாக இன்னொன்று இருக்கும். இதனால்தான் ஏதாவது ஒன்றை நாம் அறியும்போது அதற்கான எதிர்மறையானதையும் அறிந்து கொள்கிறோம். நட்பு - பகை, இன்பம் - துன்பம், மகிழ்ச்சி - கவலை, விருப்பு - வெறுப்பு என்ற உள்ளுணர்வு சார்ந்தவையும் பணக்காரன் - ஏழை, அறிவாளி - மூட்டாள், நல்லவன் - கெட்டவன், சமாதானம் - போர், பகல் - இரவு என்ற வேறு சிலவும் உதாரணங்களாகின்றன. இங்கே வாழ்வியல் சம்பந்தமான சகலவிடயங்களும் ஒருபக்கம் எமக்குச் சாதகமானவையாகவும் மறுபக்கம் பாதகமானவையாகவும் அமைவது இயற்கை விதியாகும். இந்த இயற்கை விதியின் அத்திவாரம்தான் ஒருவரது சுயஉணர்வு சம்பந்தமான வெளிப்பாடாகும்.

நமது வாழ்நிலையின் தற்போதைய நிலைக்கு அவை சாதகமானவையாக இருந்தாலும் சரி பாதகமானவையாக இருந்தாலும் சரி புறக்காரணிகளின் செல்வாக்கினாலேயே உருவாக்கப்பட்டிருப்பதாக நாம் எண்ணுகிறோம். இதுவே எம்மில் பெரும்பாலானவர்களுக்குத் தெளிவுபடுத்தப்படாத விடயமாக அவர்களது ஆயுட்காலம் முழுவதும் அமைந்துவிடுகிறது. உண்மையில் நம் ஒவ்வொருவரது தற்போதைய வாழ்நிலை மற்றவர்களாலோ அல்லது புறக்காரணிகளாலோ தீர்மானிக்கப்படுவதும் இல்லை. அமைக்கப்படுவதும் இல்லை. அதாவது நாமே நமது வாழ்நிலையை உருவாக்கிக்கொள்கிறோம் என்பது தான் உறுதியான உண்மை. இந்த உண்மையை உணரத் தவறுபவர்கள்தான் தமது பிரச்சினைகளுக்கான தீர்வை மற்றவர்களிடம் இருந்து எதிர்பார்க்கிறார்கள். ஒரு பிரச்சினை ஒருவருக்கு ஏற்பட்டதற்கான காரணம் அவரது உணர்வுசார்ந்த செயற்பாடுகளேயன்றி மற்றவர்களது கருத்துக்கள் அல்லது செல்வாக்குகளாக இருப்பதில்லை. இந்த விதியை நாம் மிகத் தெளிவாக உணரும் போது நமக்குரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு நம்மிடமே இருப்பதைச் சுலபமாக அறியமுடியும்.

துரதிஷ்டவசமாக பெரும்பாலானவர்கள் தமது குடும்பம், குழந்தைகள், உறவுகள் சார்ந்த பிரச்சினைகளுக்கு மூன்றாம் நபர்களையே குற்றம் சுமத்துபவர்களாக காணப்படுகிறார்கள். எமது தவறுகளாலும் தவறான தெரிவுகளாலும் சொல்புத்தியும் இன்றிச் சுயபுத்தியும் இன்றிச் செயற்படுவதாலும் உருவாக்கப்படும் பிரச்சினை களுக்கு நாம் தான் சூத்திரதாரர்கள் என்பதை அறிந்து கொள்ளும்போது ஒருவரது சிந்தனை, செயல், சொல் என்பன மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இந்த மாற்றங்கள் படிப்படி யாக சுயஉணர்வுடன் கூடிய தீர்மானங்களையும் தெரிவுகளையும் உருவாக்குகின்றன.

ஒவ்வொருமனிதனும் தான் வாழும் ஒவ்வொருகணமும் மகிழ்ச்சியாக வாழவே விரும்புகிறான். இந்த மகிழ்ச்சியை உருவாக்குவதற்குத் தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுகின்றனான். பொருளாதாரத்தில், குடும்ப உறவில், குழந்தை வளர்ப்பில், சமூக அந்தஸ்த்தில் என வரைய-றையற்ற விடயங்களில் தன்னிறைவும் மகிழ்ச்சியும் அடைய வேண்டும் எனப் பாடுபடுகின்றான். ஒவ்வொருவரும் தமது வாழ்வியல் நிலைக்கு ஒரு வடிவம் கொடுத்து அந்த வடிவத்தை அமைப்பதில் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு உழைப்பவர்களில் அதிபெரும்பான்மையானவர் கள் தாம் எதிர்பார்த்த அந்த மகிழ்ச்சியான நிலைக்கு அண்மையாகக் கூடத் தம்மை முன்னெடுத்துச் செல்ல முடிவதில்லை. ஏன்?

இப்போது புறக்காரணிகளை அடிப்படையாக வைத்து ஒரு மகிழ்ச்சியான நிலையை அடையமுடிவது அசாத்தியமானது என்பது வெளிப்படையாகின்றது. அதே நேரத்தில் அகக்காரணிகளிலும் எக்காரணிகள் நாம் எதிர்பார்க்கும் விளைவைத் தரும் என்பதும் விளக்கத்திற்கு அவசியமானதாகின்றது. இங்கே இந்த அகக்காரணிகளின் அத்திவாரமாக அமைவது எது என்பதைப்பொறுத்தே அதன்மீது கட்டப்படும் வாழ்வியல் நிலையும் அமையப் பெறுகின்றது. அகக்காரணிகளை உருவாக்கும் கருவிகள் எவை என்பது அறியப்பட்டதும் அவற்றால் உருவாக்கப்படும் விளைவுகளும் மிக விரைவாகத் தெளிவுபடுத்தப்படுகின்றன.

ஒருவரது சிந்தனை, சொல், செயல் என்பனவற்றை உருவாக்குவதில் முக்கிய பங்களிப்பைச் செய்பவை மனம் (Mind) என்பதும் இதயம் அல்லது உள்ளம் (Heart) என்பதுமாகும். ஒருவரது சிந்தனை, செயல், சொல் என்பனவற்றின் தன்மையைப் பொறுத்து அவை மனத்தின் வெளிப்பாடா அல்லது இதயத்தின் வெளிப்பாடா என்பது மிக இலகுவாக அடையாளம் காணப்படக்கூடியவை. இந்த மனம், இதயம் என்ற இரண்டுக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. அதாவது எம்மால் அறியக்கூடிய ஒவ்வொன்றுக்கு இரண்டு பக்கங்கள் உண்டு என்பது மிக முக்கியமானது. ஏற்கனவே குறிப்பிட்டிருப்பதைப்போல், நன்மை - தீமை, உண்மை - பொய், நம்பிக்கை- அவநம்பிக்கை என ஒவ்வொன்றுக்கும் அதற்கு எதிர்மறையான ஒன்று உண்டு. ஆனால் ஒன்றே ஒன்றுக்கு மட்டும் இரண்டு பக்கங்கள் இருப்பினும் அவை எதிர்மறையானவை அல்ல. அதுதான் இதயம்.

மனம் என்பது ஒரு குரங்கு. ஒன்றை அடையவேண்டும் என்பதற்காகத் தன்னறிவின்றித் தாவித்திரியும். எது மகிழ்ச்சியானது என்று திட்டவட்டமாக வரைவிலக்கணப்படுத்தக்கூடிய அளவிற்கு தகுதியற்றது மனம். ஒன்றைநாடி இதுதான் மகிழ்ச்சி என்று கூறிப்பின்னர் அதுவே மகிழ்ச்சியின்மைக்கான காரணியாக மாற்றப்படுவதும் இந்த மனத்தினால்தான். இதனால் தான் மனம்போன போக்கில் மனிதன் வாழக்கூடாது என்கிறோம். மனத்தைப் பின்பற்றி மகிழ்ச்சியாக வாழ்ந்தவன் எவனும் இல்லை. ஏனெனில் மனத்தின் ஒவ்வொரு தெரிவும் நிலையற்ற தெரிவுகளாக அமைவது தான். ஏன் மனத்தின் தெரிவுகள் நிலையற்றவையாக அமைகின்றனவெனில் மனம் அடிப்படையில் நிலையற்றதன்மையைக் கொண்டிருப்பதுதான். தாவித்திரிவது தான் மனத்தின் இயல்பு. இதனால் தான் மனத்தின் தெரிவுகள் நிலையானதாக இருப்பதில்லை. ஒரு மனிதனிடம் காணக்கூடிய அத்தனை எதிர்மறையான, நேர்த்தியற்ற செயற்பாடுகளும் மனத்தின் பங்களிப்பாக அமைகின்றன. மனிதத்தனத்தை மிருகக் தனமாக்குவதும் இந்த மனம்தான். நிலையற்ற விடயங்களை நிலையானதாக்க முயற்சிக்கும் இந்த மனம் ஒரு விசித்திரமானது. இதன் இரண்டு பக்கங்களில் ஒரு பக்கம் நிலையற்ற வற்றை நிலையானதாக்க முயற்சிப்பது. அதன் மறுபக்கம் நிலையானது எனக் கருதப்பட்ட விடயத்தை நிலையற்றதாக்க வேறொரு நிலை யற்ற விடயத்தைத் தாவிப்பிடிப்பது. அதாவது மனத்தின் ஒருபக்கம் நிலையான தல்லாததை நிலையானதாக்க முயற்சிப்பதும் அதன் மறுபக்கம் நிலையில்லாமல் அலைவதும் தான்.

ஆனால் உயர்ந்த மனிதப்பண்புகளின் பெட்டகம் இதயம் தான். நாம் மனத்தால் வாழ்கிறோமா அல்லது இதயத்தால் வாழ்கிறோமா என்பதை ஒவ்வொருவரும் அனுபவரீதியாக ஒவ்வொரு கணமும் அறிந்து கொள்கிறோம். இதயம் உயர்ந்த மனிதப்பண்புகளின் சுரங்கம் மட்டுமல்ல அவற்றை உலகுக்கு அறியத்தரும் சக்தியும் கொண்டது. ஒருவரது இதயம் சார்ந்த விடயங்களாக உண்மை, நேர்மை, அன்பு, பாசம், இரக்கம், உதவும் மனப்பாங்கு, மற்றவர்களது முன்னேற்றத்தைப் பாராட்டுதல், ஊக்கமளித்தல், உதவிசெய்தல், கருணை காருண்யம், தயவு, நல்வார்த்தை பேசுதல் என எம்மால் அடையாளங் காணப்படும் அத்தனை மகத்தான விடயங்களும் இதயத்தின் வெளிப்பாடே. இந்த வெளிப்பாடுகள் இதயத்தின் தன்மைகளாக இருப்பின் இதயத்திற்கு இரண்டு பக்கங்கள் எப்படி இருக்க முடியும் என்பதும் அப்படி இருக்குமாயின் அதன் மறுபக்கம் இவற்றுக்கு எதிர்மாறானதாக இருக்கமுடியாது என்பதும் உங்கள் வாதமாக அமைவதாக நான் உணர்கிறேன். வாதம் உங்களுடையதாயும் விளக்கம் என்னுடையதாயும் அமையவேண்டும் என்பது தான் இக்கட்டுரையின் நோக்கம்.

உயர்ந்த மனிதப்பண்புகள் எனக்குறிப்பிடப்பட்ட அத்தனை விடயங்களும் இதயத்தின் வெளிப்பாடு என்பது உறுதியான உண்மை. இதயத்திற்கு எதிர்மறையான எந்த விடயமும் பொருத்தமற்றது. முற்றுமுழுதாக உயர்ந்த விடயங்களைக் கொண்ட இதயத்திற்கு இரண்டு பக்கங்கள் நிச்சயமாக உண்டு. அதன் ஒருபக்கம் பிறர் நலன் சார்ந்தது. அவைதான் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள உயர்ந்த பண்புகள். அதன் மறுபக்கம் உள்ளத்தின் உரிமையாளரைப் பற்றியது. இதயத்தின் முதற்பக்கம் மற்றவர்களால் அடையாளம் காணப்படக் கூடியவை. அதன் மறுபக்கம் அவரால் மட்டுமே அறியக்கூடியது. இந்த மறுபக்கத்தின் அடிப்படை சுயசிந்தனை சுயமதிப்பு, சுயஉணர்வு, சுயமன்னிப்பு என்பனவாகும். நமது நாளாந்த வாழ்வில் மற்றவர்களால் இனங்காணப்படாத எத்தனையோ தவறுகளுக்கு சுயமன்னிப்புக் கோரும் தன்மை இதயத்தின் உயர்வான மறு பக்கத்தின் செயற்பாடுகளில் ஒன்று.

ஆம் வாசகர்களே!
இதயத்தின் ஒருபக்கம் மற்றவர்களுக்கானது. மற்றவர்களின் வாழ்வை மேம்படுத்தும் செயற்பாடுகளுக்கானது. இதயத்தின் மறுபக்கம் அதன் உரிமையாளருக்கானது. அவரது வாழ்வை மேம்படுத்தும் செயற்பாடுகளுக்கானது. இவ்வாறு இரண்டு பக்கங்களும் ஒன்றிணைந்து இயங்கும் இதயத்தின் செயற்பாடுகளால் மட்டுமே ஒவ்வொருவரும் இன்பகரமான உயர்ந்த வாழ்க்கையை உருவாக்க உதவும்.



**KG Master**
**416.725.5112**



**KG Master**
**(416) 725-5112**
**(416) 763-0332**

**Helping You and Your Family Move Forward**

| | |
|---|---|
| **Character Education** *for your children* | *Week-end Classes for 9 to 17 years old* |
| **Building Self-Esteem** *of your children* | Guidance and direction for Parents who have 2 to 8 years old children |
| **Building a Happy Family** | *Practical ideas and directions for all members of your family* |

**Email: kgm@kgmaster.com** **Web: www.kgmaster.com**

# திருச்சி...

13ஆம் பக்கத் தொடர்ச்சி

காப்பியத்தில் அரங்கநாதர் பள்ளி கொண்ட கோலத்தில் எழுந்தருளியிருக்கும் சிறப்பினை, "நீலமேகம் நெடும்பொற் குன்றத்துப் பால் விரிந் அகலாறு படிந்தது போல" என்று தொடங்கும் பாடலில் இளங்கோவடிகள் அழகுறப் புகழ்ந்து போற்றியுள்ளதில் இருந்து திருவரங்கத்தின் பழம் பெருமைய அறியலாம்.





156 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட திருவரங்கம் கோயில் ஏழு பிரகாரங்களைக் கொண்டுள்ளது. 7ஆம் பிரகாரத்தில் "அடைவளந்தான்" என்னும் திருமதில் உள்ளது. இந்த பிரகாரத்தில் உள்ள கோபுரம் "இராய கோபுரம்" என வழங்கப்படுகின்றது. இது மாட மாளிகைகள் சூழ் திருவீதி எனப்படுகிறது. 6வது பிரகாரம் "சோழன் திரிவிக்கிரமன் திருவீதி" என வழங்கப்படுகிறது. இதனைக் "கலியுகராமன் வீதி" என்றும் கூறுகிறார்கள். 5ஆம் பிரகாரம் "அகலங்கள் வீதி" என்றும் "உத்தரவீதி" என்றும் கூறப்படுகிறது. இங்கே மணவாள மாமுனிகள் சன்னிதி உள்ளது. இப்பிரகாரமே இங்கு நடைபெறும் சமயச் சடங்குகள் எல்லாவற்றிற்கும் மையமாக விளங்குகிறது. 4ஆம் பிரகாரம் "ஆலி நாடன் திருவீதி" எனக் கூறப்படுகிறது. இங்கு வேணுகோபால சன்னதி உள்ளது. ஒய்சளர் காலத்தின் அழகிய சிற்பங்கள் பலவற்றை இங்கே காணலாம். இதன் அருகில் புகழ்மிக்க சேஷ்ராயர் மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்திற்கு எதிரே ஆயிரங்கால் மண்டபம் இருக்கின்றது. இதன் மேற்கில் சக்கரத்தாழ்வார் சன்னதி உள்ளது. இங்குள்ள பல்வேறு மண்டபங்களில் இராமயணம், விஷ்ணுபுராணம் போன்றவற்றின் கதைகள் அற்புதமாக சிற்பங்களாக வடிக்கப் பெற்று விளங்குகின்றன.

ஒன்னாம் பிரகாரம் முதன் முதலில் இக்கோயிலை எழுப்பியவன் எனக் கூறப்பெறும் தர்மவர்மன் திருவீதி என வழங்கப்படுகிறது. இங்கே நாழிகேட்டான் கோபுரம் அமைந்துள்ளது. இராஜகோபுரம் முடிக்கப் பெற்று சில ஆண்டுகளுக்கு முன்னர் குடமுழுக்கு செய்யப்பட்டது. ஸ்ரீரங்கம் திருக்கோயில் பல்வேறு காலங்களில் மன்னர்களால் கட்டப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டது.

## எப்படி செல்வது? எங்கே தங்குவது?

தமிழகத்தின் குட்டித் தலைநகரம் என அழைக்கப்படும் நகரம் திருச்சி. எனவே, சென்னையிலிருந்தும் தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்தும் போக்குவரத்து மற்றும் ரயில் மார்க்கம் நிறைய உள்ளது. உணவு மற்றும் தங்கும் விடுதிகளுக்கும் திருச்சியில் பஞ்சமில்லை.


**RAHIL TRADING**

*General Trading*

(Gum, Candy, Chocolate Bars, Duracell, Panasonic Batteries, Kodak Film, Cameras, Many other items)

**NO ONE COVERS G.T.A. LIKE WE DO**

மொத்த விற்பனையாளர் & விநியோகஸ்தர்

**WHOLESALER & DISTRIBUTORS**

**RAFIQ**

Sale Executive

1340 Ellesmere Road
Scarborough, ON M1P 2X9

Tel.: 416.859.6816
Fax: 416.292.3219

rahiltrading@hotmail.com





# வெங்கட் சாமிநாதன் நினைவுகள் - 1

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக, அண்ணா கண்ணன் நான் என் சுயசரிதத்தை எழுதவேண்டும் என்று வற்புறுத்தி வந்துள்ளார். அவர் அமுதசுரபியில் பொறுப்பு வகித்த காலத்திலிருந்து என்று சொல்லவேண்டும். என் வாழ்க்கை ஏதும் அதிசயங்களும் அவதார மகிமைகளும் நிறைந்ததென்று அவர் எண்ணியுள்ளதாக யாரும் அவசர அவசரமாக ஒரு முடிவுக்கு வரவேண்டாம்.

இப்படியான தம் அவதார மகிமைகளுடன் தான் நம் சினிமா நட்சத்திரங்கள் தம் பேட்டிகளைத் தொடங்குவதை நாம் படித்துப் பழக்கப்பட்டிருக்கிறோம். நம் கவிஞர்களுக்கும் சில எழுத்தாளர்களுக்கும் இப்படியான பிரமை-கள் உண்டு தான். நியாயமாக நம் நர்த்தகிகளும், பாடகர்களும் தம் குழந்தைப் பருவத்திலிருந்தே இப்படியான சூழலில் தான் வளர்ந்துள்ளதாகச் சொல்ல வேண்டும். அவர்களைப் பற்றிய வரை அது உண்மை.

நம்மூர் அரசியல் வாதிகள், சினிமா நடிகர்கள் தம் வாழ்க்கையை எழுதலாம். மிக சுவாரஸ்யமாக இருக்கும். அவர்கள் எழுதுவது உண்மையேயானால், அது நம் பண்பாட்டுக் கூச்சல்களுக்கும் நிமிடத்திற்கு ஒரு முறை, பேருந்துப் படிகளில் ஏறி இறங்கும் போதெல்லாம் என்று நமக்கு நினைவுறுத்தப்படும் வள்ளுவ வாசகங்களுக்கு அடியில் ஓடும் நீரோடையின் குணம், மணம் என்ன என்பது தெரிய வரும். இப்படியெல்லாம் சொல்லி அலட்டிக்கொள்ளாத மண்ணில், மகாராஷ்டிரத்தில் ஹம்ஸா வாடேகரும், வங்காளத்தில் வினோதினியும் தம் சுயசரிதையை ஒழிவு மறைவு இல்லாது அப்பட்டமாக எழுதியிருக்கிறார்கள். நம் அரச-ியல் தலைவர்களிடமிருந்து இப்படி எழுத்துக்கள் பிறக்கு மானால்.......பின் அவர்கள் எப்படி அரசியல் வாதிகளாக இருப்பார்கள்?

ஆனால் என் வாழ்க்கையில் அப்படி எழுத ஒன்றுமே இல்லை. எழுத்துலகிலும் வெளியிலும் சில உன்னதமான மனிதர்களைச் சந்தித்திருக்கிறேன். அவர்களது சில குறைகளையும், பலவீனங்களையும் மீறியும் அவர்கள் உன்னதமான மனிதர்கள் தான். சில கடைத்தரமான இழிதகைகளையும் சந்தித்திருக்கிறேன், எழுத்துலகிலும், வெளியிலும். அவர்களது சில பலங்களையும் மீறி அவர்கள் இழிந்த மனிதர்கள் தான். 74 வருடங்கள் என்பது ஒரு நீண்ட காலம் தான். எவ்வளவோ மாற்றங்கள், வாழ்க்கை நியதிக-ளில், கலாச்சாரத்தில், வாழ்க்கை மதிப்புகளில். அவற்றை நினைத்துப் பார்த்தால், திகைப்பாக இருக்கும்.

இப்போது சென்னையின் புறநகர்ப் பகுதியான மடிப்பாக்கத்திற்கு வந்து எட்டு வருடங்களாக-விட்டன. இந்த எட்டு வருடங்களில் நான் ஒரு சிட்டுக்குருவியைக் கூட இங்கு பார்த்ததில்லை. என் சிறு வயதில் நிலக்கோட்டை என்னும் தண்ணியில்லாக் காட்டில் கூட இராக்காலங்களில் தெருவில் பாடிவந்த இராப் பிச்சைக்காரனை நான் இங்கு பார்த்ததில்லை. பிச்சைக்காரர்கள் மறையவில்லை. அவர்கள் வருகிறார்கள். ஒரு பந்தாவோடு.

க.நா.சு. சொல்வார்: "யாருடைய வாழ்க்கையிலும் சுவாரஸ்யமான சம்பவங்களும், மனிதர்களும் எதிர்ப்பட்டிருப்பார்கள். அவர்களைப் பற்றி கொஞ்சம் சிரத்தையெடுத்து எழுதினால் நல்ல சிறுகதைகள் நமக்குக் கிடைக்கும். ஆனால் நாவல் எழுதும் விடயம் வேறு" என்பார். இப்படி எழுதியும் இருக்கிறார். அப்படிப் பார்த்தால், நானும் எழுபதைந்தாவது வயதில் அடி எடுத்து வைத்து விட்டேன். சென்னைப் பேருந்துகளும், பெண்களிடம் தன் வீரத்தைக் காட்ட நினைக்கும் டூ வீலரில் தம்மை ராணா பிரதாப் சிங் என்று கற்பித்து அமர்ந்திருக்கும் இளம் மீசைக் காரர்களும், மடிப்பாக்கம் தெருக்களுக்கு அம்மை வடு இட்டிருக்கும் குண்டு குழிகளும் என்னிடம் இரக்கம் காட்டினால் இன்னம் கொஞ்ச நாள் இருக்கலாம். இந்த நாட்களில், க.நா.சு. சொன்னது போல என் வாழ்க்கையில் எதிர்ப்பட்ட சுவாரஸ்யமான்ன மனிதர்கள் சம்பவங்கள் பற்றி எழுதலாம். அவர்கள் தான் என் வாழ்க்கையை சுவாரஸ்யமாக்கியவை. இல்லையெனில் இந்த 74 வருடங்களும் தம் பாட்டில் தானே ஓடிய நாட்கள் தான். நான் அதற்கு ஏதும் வண்ணம் கொடுத்ததாக நினைக்கவில்லை. இதில் ஏதும் ஒரு ஒழுங்கு இராது. கால ஒழுங்கு, சம்பவ அடுக்கில் ஒரு வரிசைக் கிரமம் என்பது போல ஏதும் இராது. அவ்வப்போது எங்கிருந்தோ எங்கெங்கோ தாவுதல் நிகழும். நினைத்த போது இதைத் தொடரலாம். இடையில் வேறு விடயங்களை எழுதத் தோன்றினால், இது அவற்றிற்கு இடம் அளிக்கும்.

நான் ஐம்பதுக்களில், ஹிராகுட்டிலும், புர்லாவிலும் பின் தில்லியில் அறுபதுகளில் இருந்த போது பழகிய இருவரை சமீபத்தில் சந்திக்க நேர்ந்தது. அவர்களை 40 - 50 வருடங்களுக்குப் பிறகு சந்தித்தேன். அவர்களில் ஒருவரை எனக்கு முற்றிலுமாக அடையாளம் தெரியவில்லை. வெண்குஷ்டம் மாத்திரம் காரணமில்லை. கடைசியாக பார்த்து 50 வருடங்களுக்கு மேலாயிற்று. "யார் என்று அடையாளம் சொல்லச் சொல்லி புதிர் விட்டுக்கொண்டிருந்த ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு யார் என்று எனக்குச் சொல்லப்பட்டதும், "டேய் நீயாடா, எப்படிடா இப்படி மாறினே?" என்று கத்தத் தோன்றிற்று. எப்படி "டா" போட்டு பேசுவது? நீண்ட காலம் கழித்துச் சந்திக்கும் எங்கள் யாருக்குமே அது அழகாக இருக்குமா? தயக்கத்தை மீறுவது எப்படி? "டேய்" என்று சத்தம் போட்டிருந்தால் தான் பழைய நாட்களின் நெருக்கத்துக்கு நியாயம் செய்வதாக இருந்திருக்கும். நாங்கள் பொய் மரியாதைகளில் தஞ்சம் புகுந்தோம்.

நினைத்துப் பார்க்கத் தோன்றியது. இந்த உலகில் என் இந்த இருப்பை



உணர்த்திய முதல் கணம், என் ஞாபகத்தில் எது என்று. அது அக்காலத்தில் வளம் கொழித்த தஞ்சை ஜில்லாவில் இல்லை. கோடை காலங்களில் ராமநாதபுரம் போல தண்ணீருக்குத் தவிக்க வைக்கும் நிலக்கோட்டை என்ற ஊரில். மதுரையிலிருந்து கொடைக்கானல் போகும் வழியில் இருக்கும் ஊர். சுமார் எட்டு மைல் பெரிய குளம் நோக்கிச் சென்றால், வத்தலக்குண்டு (செல்லப்பா பெருமையோடு நினைவு கொள்ளும் ஊர். பி.ஆர். ராஜம் அய்யரையும், பி.எஸ் ராமையாவையும் நினைவு படுத்தும் ஊர். அது பொட்டல் காடல்ல. செழிப்பான இடம் தான். பின் இந்தப்பக்கம் மதுரைக்கு போகும் வழியில் சோழ வந்தானும் நிலக்கோட்டை போல பொட்டல் காடல்ல. சோழ வந்தான் தெரியுமல்லவா, டி. ஆர். மகாலிங்கம் கண்டெடுக்கப்பட்ட ஊர். ஆனால் இடையில் அகப்பட்ட நிலக்கோட்டை கோடை காலத்தில் எங்களை மிகவும் வாட்டி விடும். சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய பிரக்ஞை முதலில் எனக்குப் பட்டது. எனக்கு இரண்டு அல்லது இரண்டரை வயதாக இருக்கும் போது. நிலக்கோட்டை வத்தலக்குண்டு ரோடில் ஊர் எல்லையில் தான் அந்த ஓட்டு வீடு இருந்தது. ஒரு வண்டிப் பேட்டை எங்கள் வீட்டுக்கு எதிர்த்தாற்போல் ரோடுக்கு அந்தப் புறம். நாங்கள் இருந்த வீட்டை ஒட்டி ஒரு பெரிய வீடு. அங்கு யார் இருந்தார்கள் என்று இப்போது எனக்கு நினைவில் இல்லை. வீட்டுக்குப் பின்னால் ஒரு பெரிய அரச மரம். அதில் ஒரு பிள்ளையார், எதிரில் ஒரு மூஞ்சூறும், இரு பக்கங்களிலும் நாக தேவதைகள் உடன் இருக்க. அதைத் தாண்டி ஒரு கிணறு. சுற்றிச் சுவர் எழுப்பப்படாத கிணறு. அதைத் தாண்டினால் ஓர் ஓடை. சில மைல்கள் தொலைவில் இருக்கும் செங்கட்டான் கரட்டில் மழை பெய்தால் அதிலிருந்து வடிந்து பெருகும் தண்ணீர் செக்கச் செவேலென்று பெருக்கெடுத்து, நிலக்கோட்டையின் மறு எல்லையில் ஏரி போல பரந்திருக்கும் கொக்கிர குளத்தில் சங்கமமாகும். எங்கள் வீட்டின் எதிரிலிருக்கும் ரோடோடேயே அம்மையநாயக்கனூர் (அதன் ரயில் நிலையத்திற்கு பெயர் கொடைரோட்) நோக்கிப் போனால், கொக்கிர குளத்தின் நீளும் கரையையும், அக்குளத்தின் மறு கரையில் நிலக்கோட்டை ஊரையே, அடுக்கி வைத்த பட்டாசு கட்டாகப் பார்க்கலாம்.





SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL

Excellent Quality - Low Cost Training

Truck licence A-Z
From $599.00



In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.



Air brake

Fork Lift licence
From $75.00

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: Pl. Call: Raja / Shan

416.913.9574/416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

**Answers - 207 July 15, 07**

1) $|a + b|^2 - = \sqrt{3}$  $|a^2| + |b|^2 + 2a.b = 3$
$1 + 1 + 2ab = 3$  $ab = 1/2$
Now $(2a - 5b)(b + 3a) = -13\ a.b + 6\ |a^2| - 5\ |b^2| = -13/2+6-5=-11/2$

2. Given that $x + y + z = 0$ and $|x| = 2$, $|y| = 3$, $|Z| = 4$
Now $(x + y + z)(x + y + z) = 0$
Therefore $x.x + y.y + z.z + 2xy + 2\ xz + 2y.z = 0$
∴ $|x|^2 + |y|2 + |z|2 + 2(xy + xz + yz) = 0$
$4 + 9 + 16\ 2(xy + xz + yz) = 0$
and $xy + xz + yz = -29/2$

